# 2023

# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை

# ANNUAL REPORT

ශ්‍රී ලංකා නව නිපැයුම්කරුවන්ගේ කොමිසම
இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
**SRI LANKA INVENTORS COMMISSION**

විද්‍යා හා තාක්ෂණ අමාත්‍යාංශය
விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
Ministry of Science & Technolog

---

5th Floor, “Mehewara Piyasa” Building, Colombo 05
Tel:011-2676650, Fax: 011-2676646
Website: www.slic.gov.lk, Mail: info@slic.gov.lk




# வருடாந்த அறிக்கை 2023

**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**
விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சு

மின்னஞ்சல் : info@slic.gov.lk

இணையத்தளம்
www.slic.gov.lk

தொலைபேசி : 0112676650

விலாசம் : 5வது தளம் , "மெஹவர பியச கட்டிடம்"

கொழும்பு 05

| **உள்ளடக்கம்** | | **பக்க எண்** |
|---|---|---|
| | ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் | 4 |
| | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள் | 5 |
| | ஆணையாளர் செய்தி | 6 |
| | முன்னைய ஆணையாளரிடமிருந்து செய்தி | 7 |
| | பணிப்பாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரியிடமிருந்து செய்தி | 8 |
| 1. | இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு | 9 |
| 1.1 | அறிமுகவுரை | 9 |
| 1.2 | நோக்கு | 9 |
| 1.3 | பணி | 9 |
| 1.4 | குறிக்கோள்கள் | 9 |
| 1.5 | ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள் | 9-10 |
| 1.6 | அமைப்பாண்மை கட்டமைப்பு | 11 |
| 1.7 | மனித வளங்கள் | 12 |
| 1.8 | ஆணைக்குழுவினது சபை மற்றும் சிரேட்ட முகாமைத்துவ உறுப்பினர்கள் | 13 |
| 2. | 2023 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 14 |
| 2.1 | “சஹசக் நிமவும் 2022” சர்வதேச கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்க கண்காட்சி மற்றும் போட்டி புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் இலங்கை மற்றும் சர்வதேசத்தினை இணைக்கும் தளம். | 14 |
| 2.1.1 | 2023 ஆம் ஆண்டின் சஹசக் நிமவும்" கண்காட்சியின் வளர்ச்சி நிலை | 15 |
| 2.1.2 | சஹசக் நிமவும் சர்வதேச போட்டி | 16 |
| 2.2 | கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குவதற்கான நிதி உதவித் திட்டம் | 17 |
| 2.3 | கண்டுபிடிப்பாளர்களுக்கு தொழில்நுட்ப உதவிகளினை வழங்குவதற்கு தொழில்நுட்ப அடைகாப்பக நிலையம் | 18 |
| 2.4 | தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் இலங்கைப் பிரிவிற்கான பட்டய நிறுவனமான பிரித்தானிய கணனி சங்கம் (**BCS**) உடன் கூட்டுத்திட்டம் | 18 |
| 2.5 | விவசாயம் தொடர்பான கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் | 19 |
| 2.6 | அரச தனியார் பங்குடமை | 19 |
| 2.7 | கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கங்களுக்கான விழிப்புணர்வு அமர்வுகள் மற்றும் செயலமர்வுகள் | 19 |
| 2.8 | புத்தாக்க கலாச்சாரத்தினை உருவாக்குவதில் இளம் கண்டுபிடிப்பாளர் கழகங்கள் | 19-21 |
| 2.9 | இலங்கை சார் இளம் கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்க “இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினது ” யு டியூப் மற்றும் முகப்புத்தக பக்கம் | 21-22 |

| | | |
|---|---|---|
| 2.10 | உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் உள்ள உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களின் அறிவுசார் சொத்து (IP) உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆதரவு | 22 |
| 2.10.1 | அறிவு சார் சொத்துரிமைகளினை பெற்றுக்கொள்ள ஆதரவாக இருத்தல் | 23 |
| 2.11 | சர்வதேச மட்டத்தில் காப்புரிமைகளினை பெற்றுக்கொள்ள ஆதரவாக இருத்தல் | 23 |
| 2.12 | கண்டுபிடிப்பாளர் – முதலீட்டாளர் தொடர்பிணைப்பு | 23 |
| 2.13 | எதிர்காலத்திற்கான கூட்டு திட்டங்கள் | 23 |
| 2.13.1 | இளம் கண்டுபிடிப்பாளர் தொழில் முனைவோர் முன்னணி மேம்பாட்டுத்திட்டம் - **YIELD** | 23-24 |
| 2.13.2 | வீதி பாதுகாப்பிற்கான புதிய கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்க போட்டி | 24 |
| 2.14 | காப்புரிமை பெற்றுக்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புக்களுக்கு சனாதிபதி விருது | 24-25 |
| 2.15 | கண்டுபிடிப்பாளர்களுடன் சந்திப்புக்கள் | 25-26 |
| 2.16 | தேசிய விஞ்ஞான தினத்தினை கொண்டாடுதல் | 26 |
| 2.17 | ஆணைகுழுவினை சர்வதேச ரீதியில் அங்கீகரித்தல் | 26-27 |
| 2.18 | தேசிய புத்தாக்குனர் தினம் | 27 |
| 2.19 | கண்டுபிடிப்புக்களினை மேம்படுத்துவதற்கான ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் | 27 |
| 2.19.1 | “இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ” – யூ டியூப் | 27 |
| 2.19.2 | **“Inventor Champs" (“**கண்டுபிடிப்பு சாம்பியன்கள்”**)** மாணவர்களுக்கான புத்தாக்க ஏற்பாடுகள் | 27-28 |
| 2.20 | ஊடகத்தின் ஆதரவு | 29 |
| 2.21 | இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு **- SPAR** –இலங்கை கருத்திட்டம் | 29 |
| 2.22 | மாதாந்த சந்தை “மெஹவர பியச ” | 29 |
| 2.23 | உணவுகளுடன் தொடர்புடைய புதிய கண்டுபிடிப்புக்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்தல் | 29 |
| 2.24 | “சதுடு பௌல்” (**Sathutu Pawl**) வியாபார சந்தை | 30 |
| 2.25 | **2023** ஆம் ஆண்டில் புத்தாக்குனர்களுக்கு ஆதரவு வழங்கல் | 30 |
| 2.26 | **2023** ஆம் ஆண்டில் வர்த்தகமயப்படுத்துகை செய்யப்பட்ட தயாரிப்புக்களின் முன்னேற்றம் | 30-32 |
| 2.27 | மனித வள அபிவிருத்தி | 32 |
| 2.28 | முன்னைய 10 ஆண்டுகளில் நிதி ரீதியிலான சிறப்பம்சங்கள் | 33-36 |
| 3. | கூட்டுறவு ஆளுமை அறிக்கை | 37 |
| 4. | நிதியியற் கூற்றுக்கள் | 38-57 |

**ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்**

பேராசிரியர் . என். எம்.எஸ் . சிரிமுது

**ஆணையாளர்**

(2023.01.01 இலிருந்து 2023.05.01 வரையில் )

எஸ். கே . சிறில் சுதுவெல்ல

**ஆணையாளர்**

(2023.07.12 இலிருந்து 2023.12.31 வரையில் )

கலாநிதி . ஆர் . எம் . எச் . எம் . அனுப இந்திக ஹேரத்

**உதவி ஆணையாளர்**

(2023.01.01 இலிருந்து 2023.04.26 வரையில்)

திருமதி . கல்பனி இராஜபக்ச

**உதவி ஆணையாளர்**

(2023.11.01 இலிருந்து 2023.12.31 வரையில்)

எந்திரி . டி . டி . ஆனந்த நாமல்

**உதவி ஆணையாளர்**

(2023.07.12 இலிருந்து 2023.12.31 வரையில்)

திருமதி . எம் . கே. டி . என் . மாதம்பே

**திறைசேரி பிரதிநிதி**

(2023.01.01 இலிருந்து 2023.12.31 வரையில்)

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள்**

திருமதி . எம் . கெ. டி . என் . மாதம்பே
**திறைசேரி பிரதிநிதி**
( 2023.01.01 இலிருந்து 2023.12.31 வரையில்)

பேராசிரியர் .நீலிகா மாலவிகே
**உதவி ஆணையாளர்**
( 2022.01.01 இலிருந்து 2022.06.21 வரையில்)

கலாநிதி . ஆர் . எம் . எச் . எம் . அனுப இந்திக ஹேரத்
உதவி ஆணையாளர்
( 2023.01.01 இலிருந்து 2023.04.26 வரையில்)

திருமதி . கல்பனி இராஜபக்ச
**உதவி ஆணையாளர்**
( 2023.11.01 இலிருந்து 2023.12.31 வரையில்)

எந்திரி . டி . டி . ஆனந்த நாமல்
**உதவி ஆணையாளர்**
( 2023.07.12 இலிருந்து 2023.12.31 வரையில்)

திருமதி . எச் . டி . அனுருதிகா
**பிரதான உள்ளக கணக்காய்வாளர்**
(2023.01.01 இலிருந்து 2023.12.31 வரையில்)

பி . எ . டி . ஆர் . கெ.விக்ரமதிலக
**கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தினை சார்ந்த பிரதிநிதி**
( 2023.01.01 இலிருந்து 2023.12.31 வரையில்)

## ஆணையாளர் செய்தி



**எஸ். கே . சிறில் சுதுவெல்ல**
**ஆணையாளர் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு பாராளுமன்ற சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, உள்நாட்டு புத்தாக்கங்களின் வளர்ச்சிக்கு தேவையான தொழில்நுட்ப, நிதி மற்றும் சட்ட உதவிகளை வழங்குவதன் மூலம் அவற்றினை ஊக்குவிப்பதை பிரதான குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இன்றைய கண்டுபிடிப்புகள் ஒரு தனி நபர் அல்லது குழுவின் சாதனை என்பதனை விட பல்வேறு துறைகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள், கல்வியாளர்கள் மற்றும் பல்வேறு புத்திஜீவிகளின் ஒருங்கிணைந்த முயற்சிகள் மற்றும் மேம்பாடுகளின் விளைவாகும்.

தற்போது, உலகப் பொருளாதார மந்தநிலை காரணமாக, புத்தாக்கங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு பல சந்தை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமையை சரியான முறையில் பயன்படுத்திக் . கொள்வதற்காக, கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குவதற்கான புதிய பரிந்துரைகளை ஆணைக்குழு முன்மொழிந்துள்ளது.

சாத்தியமான புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துவதற்கு ஆணைக்குழுவின் தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, "IAFM-SL" (இலங்கை கருத்திட்டத்திற்கான புத்தாக்குனர் துரிதப்படுத்துகை,நிதிய பொறிமுறை) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் போது நிபுணத்துவ மதிப்பீட்டின் அடிப்படையில் இனங்காணப்பட்ட சாத்தியமான புத்தாக்கங்களுக்கு நிதி, தொழில்நுட்ப மற்றும் சட்ட ரீதியான உதவிகளை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.மேலும் புத்தாக்கங்களை வர்த்தக ரீதியில் ஊக்குவிப்பதற்காக சலுகை வட்டி வீதத்தில் புதிய வங்கிக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய சந்தையில் உள்ள சவால்களை வெற்றிகொள்வதற்காக, ஆணைக்குழு பல்கலைக்கழக முறைமை மற்றும் இலங்கையிலுள்ள ஏனைய ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஆணைக்குழுவில் புதிய பிரிவை அறிமுகப்படுத்துவதன் மூலம் அறிவுசார் சொத்துரிமை (IP) உரிமைகள் மற்றும் காப்புரிமை உரிமத்தின் உரிமை ஆகியவை உரிய முறையில் பாதுகாக்கப்பட்டுள்ளன.

ஆணைக்குழு மற்றும் ஷர்தா டிவி ஆகியவை மாணவர்களை இலக்காகக் கொண்டு “Inventor Champs” (கண்டுபிடிப்பாளர் சாம்பியன்கள்) திட்டத்தை ஏற்பாடு செய்தன ., இதன் மூலம் இளம் கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் கண்டுபிடிப்புகளை பொது மக்களின் அவதானிப்பிற்கு கொண்டு செல்லவும் முடிந்தது. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் 26 ஆம் திகதி நினைவு கூறப்படும் தேசிய கண்டுபிடிப்பாளர்கள் தினத்திற்கு இணையாக "ஸஹசக் நிமவும்" விருது வழங்கல் விழாவை ஆணைக் குழு வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது. அத்தகைய விருதுகளைப் பெறத் தகுதியுடைய கண்டுபிடிப்பாளர்களுக்கு ஜனாதிபதி விருதுகளை உறுதிப்படுத்துவதற்கு மேலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அனைத்து நடவடிக்கைகளின் வெற்றிக்கும் முக்கிய காரணியாக விளங்கும் நிர்வாக குழுவின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் ஆணைக்குழுவின் பணியாளர்கள் பாராட்டப்படல் மிகு அவசியமாகும்.

## முன்னைய ஆணையாளரிடமிருந்து செய்தி



**பேராசிரியர் . என் . எம் . எஸ் . சிரிமுது**
**முன்னைய ஆணையாளர்**
**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**

கண்டுபிடிப்பாளர்களும் அவர்களின் கண்டுபிடிப்புகளும் உலகின் பல நாடுகளின் பொருளாதாரப் புரட்சிக்கு பங்களித்த முக்கிய காரணிகளில் ஒன்றாகுமகண்டுபிடிப்புகளை உருவாக்க முடியாத நாடுகளினது வளர்ச்சியானது பாதிப்பிற்கு, உட்படும் அதேவேளையில் கண்டுபிடிப்புகளை உருவாக்குவதன் மூலம், உலகில் உள்ள நாடுகள் ஒவ்வொரு துறையிலும் வளர்ச்சியினை காணும் .

அந்தவகையில், நாட்டின் அபிவிருத்திக்கு உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களின் நேரடி பங்களிப்பு ஒரு தேசிய மட்டத்திலான தேவையாக கருதப்படுகிறது. குறிப்பாக , உள்ளூர் கண்டுபிடிப்பாளர்கள் உள்ளூர் வளங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி உள்ளூர் கைத் தொழில்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும்.

கண்டுபிடிப்பாளர்களின் ஆக்கபூர்வமான யோசனைகளைச் செயல்படுத்தவும், முதலீட்டாளர்களுக்கு அவற்றினை அறிமுகப்படுத்தவும், கண்டுபிடிப்புகளை மேம்படுத்தவும், ஆணைக்குழுவின் அதிகாரங்கள் அத்துடன் அமைச்சின் பங்களிப்புகள் மற்றும் உத்தரவுகள் என்பனவற்றிக்கு உட்பட்டு முதலீட்டு வாய்ப்புகளை வழங்கவும் 2023 ஆம் ஆண்டில் ஆணைக் குழு திட்டங்களைத் தொடங்கியுள்ளது அதன்படி, , பாடசாலைகள், பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்கள், திறந்த மற்றும் வணிக பிரிவுகள் மற்றும் 14 தொழில்நுட்ப துறைகளாவன முழு தீவையும் உள்ளடக்கிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தன.

ஆணைக்குழுவின் நோக்கமானது இலங்கையின் புத்தாக்க திறன்களை வளர்ப்பதன் மூலம் அவற்றை வளர்ப்பதற்கான மையமாக மாற்றுவதுடன் புத்தாக்க கலாச்சாரத்தை உருவாக்குவதும் ஆகும்.அதனை நனவாக்கும் பயணத்தில் பங்களித்த அனைவருக்கும் நாங்கள் நன்றி கூறுகிறோம்.

## பணிப்பாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரியிடமிருந்து செய்தி



திரு,என்.என் .டபிள்யு .தொலவத்த

**பணிப்பாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரி**

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்புகள் சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது, கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவித்தலுடன் உள்ளூர் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யும் பாரிய பொறுப்பை ஆணைக்குழு கொண்டுள்ளது.

இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் அதனது கடமைகளை நிறைவேற்றுகின்றது. இந்த சவாலான காலப்பகுதியில் திறைசேரியிலிருந்து நிதியம் பெறப்படலில் மட்டுப்பாடுகள் இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவானது புதிய தொழில்நுட்ப முறையின் கீழ் நிகழ்ச்சித் திட்டங்களை நிகழ்நிலை மூலம் நடத்தியதன் ஊடாக தனது சேவைகளினை தடையின்றி வழங்கியது.

மேலும், இறக்குமதி கட்டுப்பாடுகளை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொண்டு, SPAR ஸ்ரீலங்கா நவீன சந்தை சங்கிலியுடன் இணைந்து, நாங்கள் பல தயாரிப்புகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தினோம்.

ஆணைக்குழு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பித்தது, அதன்படி, பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வீதி பாதுகாப்புக்கான தேசிய சபையுடன் ஒரு வேலைத்திட்டத்தை மேற்கொண்டது; பாடசாலை மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்த ஷர்தா ஊடக வலையமைப்புடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட ஒரு யதார்த்த தொலைக்காட்சி நிகழ்ச்சியான “Inventor Champ,” மற்றும் பாடசாலை மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்துவதற்காக உலகப் புகழ்பெற்ற ஜேர்மன் நிறுவனமான சீமென்ஸின் உள்ளூர் முகவரான வரையறுக்கப்பட்ட பனாசியா சொலுஷன் தனியார் நிறுவகத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட ஒரு போட்டி அடிப்படையிலானா நிகழ்ச்சியான "YIELD" ஆகியவற்றினை சிறப்பாக குறிப்பிடலாம் .

குறித்த நிதியாண்டில் புகழ்பெற்ற தனியார் நிறுவனங்களிடமிருந்து ஆணைக்குழு நிதி உதவிகளைப் பெற்றுள்ளதுடன், இது தொடர்பில் நன்றியுடன் M/s பிரண்டிக்ஸ் DSI, வரையறுக்கப்பட்ட பனாசியா சொலுஷன் தனியார் நிறுவகம் மற்றும் வரையறுக்கப்பட்ட ஆர்பிகோ தனியார் நிறுவகம் ஆகியவற்றினை இங்கு குறிபிடலாம்.

2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சஹசக் நிமவும் கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்கப் போட்டியின் மூலம் அடையாளம் காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட புத்தாக்குனர்கள் தற்போது பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்து வருகின்றனர். .அந்த விபரங்கள் இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன

இந்த நிதியாண்டின் போது ஆணைக்குழுவின் செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுத்து செல்லப்படுவதற்கு செயலாளர் திரு. நிஹால் ரணசிங்க, மேலதிக செயலாளர் திருவதி சமந்தி வீரசிங்க, மேலதிக செயலாளர் திருவதி சமந்தி மிஹிந்துகுல, திட்டமிடல் பணிப்பாளர் நாயகம் திருவதி குமாரி மீகஹகொட்டுவ, ஓய்வுபெற்ற பணிப்பாளர் நாயகம் திரு பி.எம். தர்மதிலக மற்றும் அமைச்சின் ஏனைய அனைத்து அதிகாரிகளாலும் வழங்கப்பட்ட ஆதரவை ஆணைக்குழு நன்றியுடன் இங்கு நினைவு கூற விரும்புகிறது.

ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கு பங்களிப்பு வழங்கிய அனைவரும் மனமார்ந்த நன்றியுணர்வுடன் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மேலும், ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு தொடர்ந்து எமக்கு ஆதரவளித்த ஆணையாளர் மற்றும் முகாமைத்துவ சபையினரையும் மற்றும் குறித்த ஆண்டில் ஆணைக்குழுவின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்த கௌரவ கல்வி அமைச்சர் அவர்களினையும் நன்றியுடன் இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்.

இறுதியாக, இந்த சவாலான சூழலில் கூட பொருளாதாரத்திற்கு பங்களித்த அனைத்து கண்டுபிடிப்பாளர்களுக்கும் நாங்கள் நன்றி கூற விரும்பும் அதே வேளையில், உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு மீதமுள்ள கண்டுபிடிப்பாளர்களையும் ஆணைக்குழுவுடன் ஒத்துழைக்கும் படி நாங்கள் அன்புடன் அழைக்கிறோம்.

# 1. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

## 1.1 அறிமுகவுரை

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கத்தினை கொண்ட இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைவுற தாபிக்கப்பட்ட நியதிசட்ட சபையான இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் (SLIC), பிரதான குறிக்கோளானது ,அக புத்தாக்குனர்களின் புத்தாக்க திறனுக்கு ஆதரவு மற்றும் ஊக்குவிப்பு வழங்குதல் மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஒதுக்கீடுகளினை மேற்கொள்ளல் என்பனவாகும் .தற்போது ஆணைக்குழுவானது,கல்வி அமைச்சின் கீழ் செயற்படுகிறது.

## 1.2 நோக்கு

“Nawa Nipayum Mawana Deyak - Yasa Isurin Pirunu Hetak”
(“கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக சுபீட்சமடைதல்”)

## 1.3 பணி

“தேசத்தில் புத்தாக்க இயலளவுகளை வெளிக்கொணர்கின்ற முன்னணி வினையூக்கியாக திகழ்தல் . சிந்தனைகளினை செய்முறை பிரயோகங்களாக மாற்றுகின்ற செயன்முறையினை வசதிபடுத்தும் முன்னோடிகளாக விளங்குதல்

## 1.4 குறிக்கோள்கள்

1.4.1 இலங்கை பிரசைகளினை புத்தாக்கம் மற்றும் புது கண்டுபிடிப்புக்களினை செய்வதற்கு ஊக்குவித்தல்

1.4.2 புத்தாக்குனர்களுக்கு தொழில் நுட்பவியல் உதவிகள் நிதி ,உதவிகள் மற்றும் சட்ட உதவிகளினை வழங்கல்.

1.4.3 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தில் குறித்துரைப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.

1.4.4 .மேற் கூறப்பட்ட சகல குறிக்கோள்களினையும் சாதிப்பதற்கு தேவையான சகல செயற்பாடுகளினையும் முன்னெடுத்தல்

## 1.5 ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள்

அ) புத்தாக்குனர் புத்தாக்கங்களை காப்புரிமை வழங்கப்படுதலிற்கு ஏற்புடையதா என உறுதி செய்து கொள்வதற்கு அவர்களின் புத்தாக்கங்களை பரிசலித்து அவர்களுக்கு தொழினுட்பவியல் உதவிகளை வழங்கல் மற்றும் ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய புத்தாக்குனர்களுக்கு காப்புரிமை விண்ணப்பங்களை தயாரிக்க உதவி செய்தல்.

ஆ) ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவுற காப்புரிமை பெற்றுக்கொண்ட புத்தாக்கங்களையும் மற்றும் காப்புரிமை பெறப்படாது நிலுவையாக இருக்கும் புத்தாக்கங்களையும் விருத்தி செய்வதற்கு , நேர்த்தியாக்குவதற்கு நிதியுதவிகளை வழங்கல்.

இ) ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவுற இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் புத்தாக்குனர்களுக்கு காப்புரிமைகளை பெற்றுக்கொள்வதற்கும் அவை சூறையாடப்படாது பாதுகாக்கபடுவதற்கும் சட்ட ரீதியாக உதவியாக இருத்தல்.

ஈ) இலங்கைக்கு பயனளிக்ககூடிய புத்தாக்கங்களைஅப்புத்தாக்கங்களின் முக்கியத்துவம் மற்றும் வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான சாத்தியத்தன்மை என்பனவற்றை கருத்திற்கொண்ட பின்பு அவற்றை மேலும் உற்பத்தி செய்வதற்காக தேவையான நிதியுதவியை வழங்குவதற்கு அரசின் கீழடங்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு அவர்களுக்கு நீண்ட கால கடன் வழங்க பரிந்துரைத்தல்.

உ) புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களுக்கான சந்தையினை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தேடிக்கொள்வதற்கு உதவியாக இருத்தல்.

ஊ) புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களின் பெறுமதியினை பலர் அறியச்செய்யும் வகையில் வருடாந்தம் கண்காட்சிகளை "புத்தாக்கங்களுக்கான ஜனாதிபதி விருது "எனும் தலைப்பில் நடாத்தி அந்த கண்காட்சி விழாவின் போது இலங்கையில் காப்புரிமை பெற்ற புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்கள் தொடர்பில் விருதுகள் வழங்கப்படும் என்பதுடன் இந்த விழாவின் போது தெரிவு செய்யப்படும் புத்தாக்கங்களாவன விவசாயம் ,இரசாயணவியல் ,மருத்துவம் ,தேசிய பாதுகாப்பு . மருந்தகவியல் .பௌதிகவியல் , பொது பாதுகாப்பு மற்றும் நலன்புரி . பொதுப்பணிகள் ,போக்குவரத்து மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் ஆகிய துறைகளுடன் தொடர்புடைய துறைகளினை சார்ந்தவையாக இருத்தல் வேண்டும் .

எ) ஒரு பொது ஆராய்ச்சி ஆய்வுகூடம் மற்றும் சோதனை நிலையத்தை தாபித்தல் .அங்கீகரிக்கப்பட்ட புத்தாக்குனர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட தமது புத்தாக்கங்களை மேலும் சீர்படுத்திக் கொள்வதற்கு இந்த ஆராய்ச்சி கூடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சோதனை சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

ஏ) இலங்கை வாழ் மக்களிடையே புதிது புனைதல் மற்றும் படைப்பாக்கற்றிறன் என்பனவற்றை மேம்படுத்தவும் மற்றும் "கண்டுபிடிப்புகளுக்கான ஜனாதிபதி விருதுகள்" தொடர்பில் சம்பந்தப்பட்ட நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியாளர்களுக்கு வருடாந்தம் இடம்பெறும் "படைப்பு ஆராய்ச்சி போட்டி" மூலம் பணப்பரிசுகள் மற்றும் பதக்கங்களினை பெற்றுக்கொள்வதற்கு விவசாயம், இரசாயனம், மருத்துவம் மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் கண்டுபிடிப்புகளை உருவாக்குவதில் அவர்களுக்கு உதவுதல்.

ஐ) புத்தாக்கம் ,ஆராய்ச்சிகள் மற்றும் பொதுவான விஞ்ஞானம் என்பவற்றில் தகவல்களை பிரிசுரித்தலும் பரப்புதலும் .

ஒ) புத்தாக்குனர்களிடையே கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கு ஒரு ஒழுங்கு முறையில் மாதாந்தம் கூட்டத்தொடர்களை நடாத்துவதற்கு .

ஓ) புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கான சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கு இலங்கை புத்தாக்குனர்களுக்கு உதவுதல் அல்லது அத்தகைய போட்டிகளில் அவர்களை பங்குபெறச் செய்வதற்கு பரிந்துரைத்தல் மற்றும்

ஔ) இலங்கை வாழ் இளைஞர்களிடையே படைப்பாற்றல் திறனை ஊக்குவிப்பதற்கு பள்ளிகூடங்கள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆக்கற்றிறன் சங்கங்களை ஒழுங்கமைத்தல்.

## 1.6 அமைப்பாண்மை கட்டமைப்பு



## 1.7 மனித வளங்கள்

| விவரணம் | அங்கீகரிக்கப் பட்ட தொழி ல்நிலை ப்பிரிவு | 2023 ஆம் ஆண்டிற்கான தொழி ல்நிலை ப்பிரிவு | 2023 டிசம்பர் 31இல் உள்ளவாறான வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பணிப்பாளர் (சிரேட்ட நிறைவேற்று அலுவலர்) | 01 | 01 | - |
| பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளர் | 02 | 02 | - |
| பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளர் (நிதி ) | 01 | 01 | - |
| சட்ட அலுவலர் | 01 | - | 01 |
| நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | 03 | 03 | - |
| நிர்வாகஅலுவலர் | 01 | 01 | - |
| நிதி அலுவலர் | 01 | 01 | - |
| ஆராய்ச்சி உதவியாளர் | 05 | 02 | 03 |
| முகாமைத்துவ உதவியாளர் | 07 | 04 | 03 |
| சாரதி | 04 | 04 | - |
| அலுவலக உதவியாளர் | 02 | 02 | - |

## 1.8 ஆணைக்குழுவினது சபை மற்றும் சிரேட்ட முகாமைத்துவ உறுப்பினர்கள்



எஸ். கே . சிறில் சுதுவெல்ல
**ஆணையாளர்**



திருமதி.கல்பனி இராஜபக்ச
**உதவி ஆணையாளர்**



எந்திரி.டி.டி . ஆனந்த நாமல்
**உதவி ஆணையாளர்**



திருமதி .எம்.கெ.டி.என்.மாதம்பே
**திறைசேரி பிரதிநிதி**



திரு,என்.என் .டபிள்யு .தொலவத்த
**பணிப்பாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரி**



செல்வி . டி . எ . சரத்சந்திர
**உதவி பணிப்பாளர் ( நிதி)**



திரு.டி.எம்.எல்.ரத்னாயக
**உதவி பணிப்பாளர் (கருத்திட்டங்கள்)**



திருமதி .பி..எல்.லியனகம
**உதவி பணிப்பாளர்**
**(விசேட கருத்திட்டங்கள் )**

## 2. 2023 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

### 2.1 "சஹசக் நிமவும் 2022" சர்வதேச கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்க கண்காட்சி மற்றும் போட்டி –புதிய கண்டுபிடிப்பிக்கள் மூலம் இலங்கை மற்றும் சர்வதேசத்தை இணைக்கும் தளம்.

"சஹசக் நிமவும்" சர்வதேச கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்க கண்காட்சி மற்றும் போட்டி என்பது புத்தாக்குனர்களுக்கு சரியான சமூகமயமாக்கல், முதலீட்டாளர் சமூகத்துடன் தொடர்புகொள்வதன் ஊடாக தயாரிப்புகளை வணிகமயமாக்கல் நிலைக்கு கொண்டு செல்வது, மற்றைய புத்தாக்குனர்களுடன் அறிவையும் தொழில்நுட்பத்தையும் பகிர்ந்து கொள்வது, சாதனைகளுக்கு உரிய பாராட்டுகளைப் பெறுவதுடன், சர்வதேச அளவிலான கண்காட்சியில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறுவது போன்ற தனித்துவமான நன்மைகளை வழங்கும் ஒரு திட்டமாகும்.

இந்தப் போட்டியில், பாடசாலைகள் , பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்கள், வணிகமயமாக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் மற்றும் திறந்த வகை ஆகிய நான்கு முக்கிய பிரிவுகளின் கீழ் பின்வரும் பதினான்கு (14) தொழில்நுட்பத் துறைகளில் இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் போட்டியில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படும்.

- பொது பாதுகாப்பு, நலன் மற்றும் தேசிய
- இரசாயானவியல்
- உணவு தொழில்நுட்பம்
- மருத்துவம் மற்றும் மருந்தகம்
- பாரம்பரிய மருத்துவம்
- பொதுப்பணி மற்றும் உள்கட்டமைப்பு பொறியியல்
- பௌதீகவியல்
- தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம்
- விவசாயம்
- பயன்பாட்டு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்
- ஆற்றல்
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- போக்குவரத்து
- பொறியியல்

2019 ஆம் ஆண்டு வரை, மாகாண மட்டத்தில் மாகாண மட்டத்தில் பௌதீக ரீதியாக விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்பட்டன, பின்னர் அவை நிகழ்நிலை போட்டியாக நடத்தப்பட்டன. அதே நடைமுறையைப் பின்பற்றி, 2023 ஆம் ஆண்டில், நாங்கள் ஒரு வெற்றிகரமான நிகழ்நிலை போட்டியை நடத்தினோம்.

"

"சஹசக் நிமவும்" 2022 போட்டிக்கான விருது வழங்கள் வைபவமானது, தேசிய புத்தாக்குனர் தினத்தன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் , 2023 ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதியன்று, ஆணைக் குழுவினால் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கௌரவ. கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், கல்வி அமைச்சின் செயலாளர் திரு. நிஹால் ரணசிங்க, கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திருமதி திலகா ஜயசுந்தர. ஆகியோர் கலந்து நிகழ்வினை சிறப்பித்தனர்.இந்த சந்தர்ப்பம் 2022 ஆம் ஆண்டில் விருது பெற்ற பலரைப் பாராட்டுவதற்க்கு, இந்த சந்தர்ப்பம் பயன்படுத்தப்பட்டதுடன், செய்யப்பட்ட செலவினத்திற்கு ஏற்ற வகையில் நிகழ்ச்சிகளும் சிறந்த முறையில் இடம்பெற்றது



### 2.1.1 " 2023 ஆம் ஆண்டின் சஹசக் நிமவும்" கண்காட்சியின் வளர்ச்சி நிலை

2023 ஆம் ஆண்டில், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது "சஹசக் நிமவும்" திட்டத்தில் Zoom தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கண்டுபிடிப்பாளர்களுக்கு நிகழ்நிலை ரீதியாக விழிப்புணர்வு அமர்வுகளை நடத்தியது. இந்நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்கள், இளங்கலை பட்டதாரிகள், உயர்நிலைக் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள், திறந்த மற்றும் வணிகப் பிரிவுகளில் கண்டுபிடிப்பாளர்கள், கண்டுபிடிப்பாளர் கழகப் பொறுப்பாளர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.






"சஹசக் நிமவும் 2023" ஆனது இந்த ஆண்டில் 737 கண்டுபிடிப்புகளைப் பெற்றுள்ளது .அதே நேரத்தில், ருஹுணு பல்கலைக்கழகத்துடன் இணைந்து ருஹுண கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்க கண்காட்சி (RIIE –2023) இனை பௌதீக ரீதியாக ஆணைக்குழு நடத்தியதுடன், பிற மாகாணங்களினை சார்ந்தபுத்தாக்கங்களாவன, நிகழ் நிலைஊடாக மதிப்பீடு செய்யப்பட்டன .

இறுதியாக 560 புத்தாக்கங்கள் தேசிய போட்டிக்குத் தகுதி பெற்றதுடன், தேசிய மட்டத்திலான குழுவினை சார்ந்த 150 குழு உறுப்பினர்கள் மதிப்பீட்டிற்காக தங்கள் சேவையை நல்கினர்.

### 2.1.2 “சஹசக் நிமவும் ”சர்வதேச போட்டி




2019 ஆம் ஆண்டு வரை அரசாங்க திறைசேரியை மட்டுமே நம்பியிருந்த இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது வருமானத்தை ஈட்ட ஆரம்பித்துள்ளது. அதன்படி, 2019 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு கண்டுபிடிப்புகளை பதிவு செய்வதன் மூலம் ஆணைக்குழு வருமானம் ஈட்டியுள்ளது. அதன்படி கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குவதன் மூலம் உள்ளூர் வருமானத்தை அதிகரிப்பதுடன், வருவாயை உருவாக்குவதன் மூலம் அரசாங்க திறைசேரிக்கு ஆணைக்குழு பங்களித்துள்ளது.

| **வருடம்** | **ஈட்டிய வருமானம்** | |
|---|---|---|
| 2023-2024 | வெளி நாடு | 2023 – 2024 நடைமுறையில் |
| 2023 | அகம் | 243,375 |

அதன்படி 2023/2024 ஆம் ஆண்டிற்கான சர்வதேச போட்டி தொடங்கியுள்ளது.




## 2.2.கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குவதற்கான நிதி உதவித் திட்டம்

கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்கும் நிமித்தம் புத்தாக்குனர் துரிதப்படுத்துகை நிதிய பொறிமுறை (IAFM-SL) மற்றும் கண்டுபிடிப்பாளர்கள் நிதி மூலம் பூஜ்ஜிய வட்டியுடன் வழங்கப்பட்ட நிதி உதவிஆகியன 2022 ஆண்டு முதல் நிறுத்தப்பட்டதுடன்,கண்டுபிடிப்பாளர்கள் அரசுக்கு சொந்தமான வங்கிகளுக்கு நெறிப்படுத்த தீர்மானிக்கப்பட்டது .அதன்படி, பிராந்திய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சாதகமான பதிலினை தொடர்ந்து, ஆணைகுழுவானது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதுடன், 11 கண்டிபிடிப்பாளர்கள் ஆணைகுழுவின் பரிந்துரையின் பேரில் வங்கிக்கு அனுப்பப்பட்டனர்.

இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்புச் சட்டத்தின் விதிகளின்படி, அடையாளம் காணப்பட்ட சாத்தியமான கண்டுபிடிப்பாளர்களுக்கு வணிகமயமாக்கல் கடன்களை வழங்குவதற்காக ஆணைக்குழு நிதி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டது. அதன்படி, ஆணைக்குழுவின் அதிகாரிகள் பிராந்திய அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகளுடன் 11 கள சோதனைகளை நடத்தி சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொண்டனர்.

இதன் விளைவாக, பிராந்திய அபிவிருத்தி வங்கியானது ,23% வட்டி விகிதத்தில் 0.6 மில்லியன் ரூபாயினை கண்டுபிடிப்பாளர் எ.கெ. சமந்தாவுக்கு வழங்கியதுடன் ,இந்த புதிய விதியின் மூலம், காப்புரிமையை பிணையமாக வைத்து, அரசுக்கு சொந்தமான நிதி நிறுவனங்கள் மூலம் உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களுக்கு கடன் வழங்க ஆணைக்குழு முயற்சி செய்தது .இந்த முயற்சி வெற்றிபெறவில்லை.காப்புரிமையை பிணையமாக ஏற்க நிதி நிறுவனங்கள் தயக்கம் காட்டுவதால் ஆணைக்குழுவின் அவதானிப்புகளின்படி, நிதி நிறுவனங்கள் கண்டுபிடிப்பாளர்களுக்கு போட்டிக்குரிய வட்டி விகிதங்களை வழங்காது இருப்பதுடன், இது தொடர்பில் அவர்கள் சாதாரண வங்கி நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றனர்



## 2.3 கண்டுபிடிப்பாளர்களுக்கு தொழில்நுட்ப உதவிகளினை வழங்குவதற்கு தொழில்நுட்ப அடைகாப்பக நிலையம்

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்புச் சட்டத்தின் விதிகளின்படி, ஆணைக்குழுவானது, உள்நாட்டில் ஒரு ஆய்வு கூடத்தினை பராமரிக்க வேண்டும், ஆனால் வரையறைகளின் காரணமாக, ஆணைக்குழு மற்றும் நேர் அமைச்சு ஆகியவை அடைகாப்பகத்தினை வெளிப்புறமாக அமைப்பதற்கு தேவையான மாற்று நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கண்டுபிடிப்புக்களினை உருவாக்க அடைகாப்பகங்கள் மூலம் தொழில்நுட்ப சேவைகள் வழங்கப்படுகின்றன.



இதன்படி, ஆணைக்குழுவின் முழு சம்பந்தப்படலுடன் தேசிய எந்திரவியல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ரஜரட பல்கலைக்கழகம் மற்றும் ருகுணு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் நான்கு தொழில்நுட்ப அடைகாப்பகம் நிலையங்கள் அமைக்கப்பட்டன.

இந்த அடைகாப்பக நிலையங்கள் இலங்கையின் கண்டுபிடிப்பாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பள்ளி மாணவர்களின் கருத்துக்களை முன்மாதிரிகளாக மாற்றுவதற்கும் சந்தையை வெற்றி கொள்ளக்கூடிய வகையில் கண்டுபிடிப்புகளினை மாற்றுவதற்கும் தேவையான தொழில்நுட்ப சேவைகளையும் வழங்குகிறது.

## 2.4 தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் இலங்கைப் பிரிவிற்கான பட்டய நிறுவனமான பிரித்தானிய கணனி சங்கம் (BCS) உடன் கூட்டுத்திட்டம்



தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான கண்டுபிடிப்புகளாவன அரச – தனியபங்குடமை என்ற வகையில் ஆணைக்குழு மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் இலங்கை பிரிவுக்கான பட்டய நிறுவனமான பிரித்தானிய கணனி சங்கம் (BCS) ஆகியவற்றினால் பாராட்டப்பட்டது. பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ,என்ற வகையில் செயற்படும் எந்திரி என்.என். டபிள்யு தொலவத்த அவர்கள் தேசிய மட்டத்தில் இடம்பெறக்கூடிய அனர்த்தங்களினை தடுப்பதில் பங்களிக்ககூடிய வகையினை சார்ந்த கண்டுபிடிப்புகளினை மதிப்பீடு செய்யும் குழு உறுப்பினர் என்ற ரீதியில் தன் பங்களிப்பினை வழங்கினார் தகவல்,தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான அதிநவீன கண்டுபிடிப்பை அங்கீகரிப்பது இந்த நிகழ்வின் முக்கிய நோக்கமாகும். தகவல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய விருது வழங்கும் விழாவில் வெற்றியாளர்களும் நடுவர் குழுவும் பாராட்டப்பட்டதுடன், தகவல்,தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான சர்வதேச போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு கலந்துக்கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.. இந்த ஒத்துழைப்பினை எதிர்காலத்திலும் தொடர ஆணைக்குழு நாட்டம் கொண்டுள்ளது.

## 2.5 விவசாயம் தொடர்பான கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்

விவசாயம் தொடர்பான கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் வருடாந்திர நிகழ்ச்சி 2023 ஆம் ஆண்டில் விவசாய அமைச்சுடன் இணைந்து தொடர்ந்து நடத்தப்பட்டது ."சஹசக் நிமவும்" வெற்றியாளர் முப்பது பேர்கள் இந்த நிகழ்ச்சியுடன் இணைக்கப்பட்டனர்.

அதன்படி, அறிவுசார் சொத்து பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நிகழ்நிலை அடிப்படையில் நடத்தப்பட்டது.

அத்துடன் , தென் மாகாண அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவினால் நடாத்தப்படும் பயிற்சித் திட்டத்திற்கான வளவாளர்களுக்கு ஆணைக்குழு தனது ஆதரவினை வழங்கியது. "சஹசக் நிமவும்" கண்காட்சியில் பங்கேற்ற மற்றும் விவசாயம் தொடர்பான கண்டுபிடிப்பாளர்களை ஆணைக்குழு மேற்படி திட்டத்துடன் இணைத்துள்ளது. முதல் கட்டத்தில் காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டையில் மூன்று நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன, இரண்டாவது கட்டத்தில் காப்புரிமை வரைவு செயல்முறை பற்றிய விழிப்புணர்வு உட்பட மூன்று நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

## 2.6 அரச தனியார் பங்குடமை

கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்காக கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதில் ஆர்வம் காட்டும் புகழ்பெற்ற தனியார் துறை நிறுவனங்களுடன் ஆணைக்குழு இணைந்துள்ளது . அத்துடன் புத்தாக்க போட்டிகள், விழிப்புணர்வு திட்டங்கள், கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குதல் மற்றும் கண்டுபிடிப்பாளர்களுக்கான அனுசரணைகள் போன்ற நடவடிக்கைகளில் ஆணைக்குழு கீழே குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுகிறது.

- SPAR Sri Lanka
- Panacea (Pvt) Ltd
- Dialog Axiata PLC
- ADVANTIS Engineering
- Arpico Furniture
- Brandix Apparel (Pvt) Ltd
- D Samson Industries (Pvt) Ltd
- Gaja TV
- Sharaddha Media Network

## 2.7 கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கங்களுக்கான விழிப்புணர்வு அமர்வுகள் மற்றும் செயலமர்வுகள்.

கண்டுபிடிப்பு செயல்முறை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பட்டறைகளை நடத்துவதற்கான கோரிக்கைகளை ஆணைக் குழு தொடர்ச்சியாக பெறுகிறது .இத்தகைய நிகழ்வுகளினை நடத்துவதன் மூலம் பங்கேற்பாளர்கள் நடைமுறை அனுபவத்தைப் பெறவும், கண்டுபிடிப்பு செயல்முறை பற்றிய அறிவை மேம்படுத்தவும் இயலும்.

பாடசாலைகளுக்கும் 08 நிறுவகங்களுக்கும் **04** பதினொரு விழிப்புணர்ச்சி அமர்வுகள் முன்னெடுக்கப்பட்டன .

தென் மாகாணத்தினை சார்ந்த விவசாய வினைமுயலுமை அபிவிருத்தி அலகு, அட்வண்டிஸ் என்ஜினியரிங் , இலங்கை இராணுவம் மற்றும் கேச்பெவில் உள்ள விதாதா நிலையம் ஆகியவற்றினால் ஏழு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் இதன் மூலம் கிட்டத்தட்ட 1000 பேர்கள் பயனடைந்தனர்.

## 2.8 புத்தாக்க கலாச்சாரத்தினை உருவாக்குவதில் இளம் கண்டுபிடிப்பாளர் கழகங்கள்

இளம் கண்டுபிடிப்பாளர்களின் கழகங்களினை உருவாக்குவதன் நோக்கம் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்களின் மாணவர்களிடையே ஒரு புத்தாக்க கலாச்சாரத்தை உருவாக்குவதாகும். 2023 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட 105பாடசாலைகளில்கண்டிபிடிப்பாளர் கழகங்கள் நிறுவப்பட்டன .அவற்றுள் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அழகியல் நிறுவகமான சுவாமி விபுலானந்தாவில் நிறுவப்பட்ட கண்டுபிடிப்பாளர் சங்கமும் அடங்கும்.

ஆணைக்குழு வழங்கிய நிதி உதவி தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் **31** முன்னேற்ற அறிக்கைகள் பாடசாலைகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.அவர்கள் இந்த நிதியினை பயன்படுத்தி துணையுறுப்புக்கள் வாங்கவும் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்யவும் பயன்படுத்தியுள்ளனர்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில் கண்டுபிடிப்பு போட்டிகளை நடத்த ஆணைக்குழு ஆதரவளித்தது.

1.விசாகா கல்லூரி -Innosphere'23
2.நாளாந்த கல்லூரி -NOVUS TECHNICA '23
3.சாந்த ஜோன் கல்லூரி – நுகேகொட
4.மஹாநாம கல்லூரி -INSYPO' 23







மேலும், பின்வரும் பாடசாலைகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

1.மகாமத்திய வித்தியாலயம் அதுருகிரிய
2.திருக்குடும்ப கன்னியர் பாடசாலை வென்னப்புவ
3.ஹேமமாலி மகா வித்தியாலயம் கணேமுல்ல
4.வலல A , ரத்நாயக மத்திய கல்லூரி கண்டி
5.சாந்த ஜோன் கல்லூரி – நுகேகொட
6.டட்லி சேனானயாக மகளிர் மஹா வித்தியாலயம்
7.ஆனந்த மஹா வித்தியாலயம் தெவலபோல
8.சந்திரவன்ச மஹா வித்தியாலயம் எல்பிடிவெல



நேர் அமைச்சின் உத்தரவுகளின் படி, 2023 ஆம் ஆண்டில் பாடசாலை கண்டுபிடிப்பாளர்களுக்காக கண்டுபிடிப்பு செயல்முறை மற்றும் புத்தாக்கங்களுக்கான வழிகாட்டி புத்தகம் தயாரிக்கப்பட்டு இப்போது கண்டுபிடிப்பாளர்களின் கழகங்களுக்கு விநியோகிக்கப்பட்டு அச்சிடப்பட்டு வருகின்றது . கண்டுபிடிப்பாளர்களின் கழகங்களின் முன்னேற்றத்தை பற்றிய தகவல்களினை பெறவும் கழகங்களினை சிறப்பாக பராமரிக்கவும் இது பயனுள்ளதாக இருக்கும்

வரையறுக்கப்பட்ட Brandix நிறுவகத்துடன் இணைந்து மினுவாங்கொடை ஆனந்த வித்தியாலயத்திற்கு Smart Board அன்பளிப்பு செய்யப்பட்டதுடன், கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கங்களின் செயல்முறை பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு அன்றைய தினம் நடைபெற்றது





**2.9 இலங்கை சார் இளம் கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்க "இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினது You Tube மற்றும் முகப்புத்தக பக்கம்**

பல்வேறு துறைகளினது புதிய போக்குகள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்புகள் தொடர்பில் சிறந்த அறிவைப் இலங்கையின் கண்டுபிடிப்பாளர்கள் சிறந்த முறையில் பெற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு YouTube மற்றும் Facebook போன்ற சமூக ஊடக தள வசதிகள எளிதாக்கப்படுகிறது.

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கங்கள், வணிகத் திறன் கொண்ட கண்டுபிடிப்புகளுக்கு விளம்பரம் வழங்குதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்த்தல், கண்டுபிடிப்பாளர்களுக்கு மதிப்பை வழங்குதல் மற்றும் அதிநவீன வசதிகளை கையாள்வதற்கான சாதகமான சூழலை உருவாக்குதல் என்பனவாகும் .இத் திட்டத்திற்கான அலைவரிசையானது புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு புத்தாக்கங்கள், காப்புரிமை செயல்முறை மற்றும் பல வசதிகள் பற்றிய அவர்களின் அறிவை மேம்படுத்த உதவுகிறது.

அதற்கேற்ப புத்தாக்க கலாசாரத்தை உருவாக்குதல், வளவாளர்களின் சேவைகளை வழங்குதல், கண்டுபிடிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பாடசாலை மாணவர்களிடையே கண்டுபிடிப்புகள் குறித்த அறிவாற்றல் இடைவெளியைக் குறைத்தல் போன்ற பல வசதிகளைப் இதன் மூலம் பெற முடியும்.

2023 ஆம் ஆண்டில் இதனுடன் தொடர்புற்ற வகையில் நான்கு கட்புல நாடாக்கள் வெளியிடப்பட்டதுடன், இந்த நாடாக்கள் 19,872 பேர்களினால் அணுகப்பட்டதுடன் அலைவரிசைக்கான சந்தாக்காரர் 226 பேர்கள் ஆவார்கள்.




## 2.10 உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் உள்ள உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களின் அறிவுசார் சொத்து (IP) உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆதரவு

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் அறிவுசார் சொத்து) IP) உரிமைகளைப் பெறுவதற்கான செயல்முறை ஆகியவை தொடர்பில் 800 ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்க திட்டமிட்டுள்ளது. பாடசாலை மட்டத்திலான கண்டுபிடிப்புகளின் அறிவுசார் சொத்து (**IP)** உரிமைகளைப் பாதுகாக்க இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் . இதன்படி முதல் நிகழ்ச்சியானது, ஆணைக்குழு மற்றும் தேசிய அறிவுசார் சொத்துரிமை அலுவலகத்தின் (NIPO) வளவாளர்களால், மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தில், மேல்மாகாண நாற்பது ஆசிரியர்களின் பங்களிப்புடன் நடத்தப்பட்டது.



### 2.10.1 அறிவு சார் சொத்துரிமைகளினை பெற்றுக்கொள்ள ஆதரவாக இருத்தல்

ஆணைக்குழுவானது மத்திய மாகாண கல்வி அமைச்சு **02** மற்றும் தென் மாகாண விவசாய தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி அலகு **03** ஆகியவற்றுடன் இணைந்து **05** காப்புரிமை பட்டறைகளினைகாலி**,** மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் நடத்தியுள்ளது .

மேலும்**,** "சஹசக் நிமவும்" வெற்றியாளர்கள் எழுபத்தாறு பேர் நிகழ் நிலை வசதியின் மூலம் காப்புரிமை பெறுவதற்கான அறிவைப் பெற்றுள்ளனர் 02நிகழ்ச்சிகள்

அதுமட்டுமல்லாமல்**,** கோரிக்கை அடிப்படையில் ஒரு வழித்தட நடவடிக்கையாக அடிக்கடி காப்புரிமை பெறுவதற்கான அறிவினை விழிப்புணர்வு நிகழ்ச்சி ஊடாக ஆணைக்குழு வழங்கியுள்ளது

### 2.11 சர்வதேச மட்டத்தில் காப்புரிமைகளினை பெற்றுக்கொள்ள ஆதரவாக இருத்தல்

சர்வதேச காப்புரிமைக்கான விண்ணப்பக் கட்டணங்கள், காப்புரிமை ஒத்துழைப்பு ஒப்பந்த (PCT) கட்டணம் மற்றும் முதலீட்டின் மீதான வருவாயின் சரியான மதிப்பீட்டின் அடிப்படையில் இலங்கை கண்டுபிடிப்பாளர்களால் செலுத்தப்படும் சட்டக் கட்டணங்கள் ஆகியவற்றைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஆணைக்குழு ஆதரவளிக்கிறது.

உள்ளூர் கண்டுபிடிப்பாளர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளுக்கு சர்வதேச காப்புரிமைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில் அல்லது காப்புரிமை ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் கீழ் அவர்களின் அறிவுசார் சொத்துரிமைகளை உறுதிப்படுத்த அவர்கள் பணிபுரியும் சந்தர்ப்பங்களில், அது தொடர்பான செலவினங்களுக்காகவும், தொழில்முறை கொடுப்பனவுகளுக்காகவும் ஆணைக்குழு ரூபாய் 100,000.00 இனை வழங்குகிறது.

குறிப்பிட்ட ஒரு கண்டுபிடிப்பு தொடர்பில் சர்வதேச காப்புரிமை அல்லது காப்புரிமை ஒத்துழைப்பு ஒப்பந்தம் (PCT) என்பனவற்றினை பெறுவதற்கான செலவீனமாக தாம் செலவழித்த தொகையைக் ஆணைக்குழு கருத்தில் கொள்ளாது அதற்கு பதிலாக, அந்நியச் செலாவணி என்ற வகையில் நாட்டிற்குத் திரும்பக் கிடைக்கக்கூடிய முதலீடாகவே ஆணைக்குழு கருதுகிறது, இங்கு பொது நிதியம் சரியான முறையில் பயன்படுத்தப்படுவதாகவும் கருதப்படுகிறது.

### 2.12 கண்டுபிடிப்பாளர் – முதலீட்டாளர் தொடர்பிணைப்பு

காப்புரிமை பெற்ற நான்கு கண்டுபிடிப்பாளர்கள் தங்கள் காப்புரிமை பெற்ற தயாரிப்புகளை வணிகமயமாக்குவதற்காக அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டனர் .அவற்றில் "Lightning Earthing "எனும் சாதனம் இலங்கை ரயில்வே திணைக்களத்துடன் இணைக்கப்பட்டு, கண்டுபிடிப்பாளருக்கான வணிக வாய்ப்பை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது.

அதுமட்டுமல்லாமல், அடுக்குத் திரவியங்களிலிருந்து நெநோ சிற்சிறு துண்டுகளில் இருந்து சில்லுகளினை உற்பத்தி செய்வதற்கான இயந்திர உரித்தல் நுட்பம் கஹடகஹா கிராபைட் லங்கா,போகல கிராபைட் லங்கா ஆகிய நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டது. இதன் மூலம் ,வெற்றிகரமான முறையில் வணிகம் ,ஆராய்ச்சி மற்றும் ஒத்துழைப்பு என்பன ஏற்படுத்தப்பட்டது .

### 2.13 எதிர் காலத்திற்கான கூட்டு திட்டங்கள்

### 2.13.1 இளம் கண்டுபிடிப்பாளர் தொழில் முனைவோர் முன்னணி மேம்பாட்டுத்திட்டம் - YIELD

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, வரையறுக்கப்பட்ட PANACEA SOLUTIONS (PVT) LTD உடன் இணைந்து இலங்கை மாணவர்களின் புத்தாக்க திறன்களை மேம்படுத்தும் வகையில் அதிநவீன 3D தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி "Solid Edge 'எனப்படும் நிகழ்ச்சித்திட்டத்தை உலகப் புகழ்பெற்ற ஜெர்மன் நிறுவனமான சீமென்ஸின் இனது மூலவகைமாதிரி மேம்பாட்டிற்காக அறிமுகப்படுத்தியுள்ளது . முன்மாதிரிகளை உருவாக்கவும், அவற்றின் வேலைத்திறனை சரிபார்க்கவும் இது மிகவும் பயனுள்ள கருவியாகும். . இந்த தொழில்நுட்பத்தினை மேம்படுத்துவதற்கும் சமீபத்திய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த இளம் தலைமுறையினரை ஊக்குவிப்பதற்கும் வரையறுக்கப்பட்ட பனாசியா சொலுஷன் தனியார் நிறுவகத்துடன் உடன் இணைந்து ஒரு திட்டத்தை ஆணைக்குழு முன்னெடுத்தது.

வரையறுக்கப்பட்ட PANACEA SOLUTIONS (PVT) LTD தினால் இலவசமாக வழங்கப்படும் மென்பொருள் வசதியானது **,** மூலப்பொருட்களின் விலையைக் குறைத்தல் **,** முன்மாதிரியின் ஆரம்ப செலவைக் குறைத்தல் **,** செயல்திறனை எளிதாகச் சரிபார்த்து மேலும் மேம்படுத்தல் போன்ற இதர பலவற்றிக்கு உதவுகிறது.

மாணவர்களால் உருவாக்கப்பட்ட 700 வடிவமைப்புகளினையும் மற்றும் "Solid Edge" மென்பொருளை ஒரு கருவியாகப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட 85 வடிவமைப்புகளினையும் ஆணைக்குழு பெற்றுக்கொண்டது.இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது தலைசிறந்த தொழில்நுட்பக் குழுவொன்றை நியமித்து ஐந்து சிறந்த வடிவமைப்புகளைத் தெரிவு செய்தது. PANACEA SOLUTIONS (PVT) LTD நிறுவகமானது விருது வென்றவர்கள் மற்றும் வழிகாட்டப்பட்ட ஆசிரியர்களுக்கு முப்பரிமாண அச்சுப்பொறிகள், அளவில் சிறிய கணனிகள் (tabs," கள் )மற்றும் பண விருதுகள் ஆகியவற்றினை வழங்கியது.






### 2.13.2 வீதி பாதுகாப்பிற்கான புதிய கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்க போட்டி

கிடைக்கக்கூடிய புள்ளிவிவரங்கள் மற்றும் தரவுகளின்படி, சாலை தொடர்பான விபத்துகளின் போக்கு அதிகரித்து வருகிறது, அதற்கேற்ப, இறப்புகளின் எண்ணிக்கை மற்றும் பௌதீகவியல் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறதுஅதன்படி., இலங்கை புத்தாக்குனர்ஆணைக்குழு மற்றும் வீதி பாதுகாப்புக்கான தேசிய சபை ஆகியவை 2023 இல் ஒரு வேலைத்திட்டத்தை நடத்தி இலங்கையின் கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் படைப்பாற்றல் மிக்க குடிமக்களிடமிருந்து புதிய யோசனைகளைப் பெறுவதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை எடுத்துள்ளன. நியாயமான முதலீட்டு செலவில் புது வகையான யோசனைகளினை பயன்படித்தி சாலை தொடர்பான விபத்துக்களினை குறைப்பது அல்லது தடுப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

### 2.14 காப்புரிமை பெற்றுக்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புக்களுக்கு சனாதிபதி விருது

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது இலங்கை கண்டுபிடிப்பாளர்களுக்கு முறையான அங்கீகாரம் வழங்கி அவர்களின் கண்டுபிடிப்புகளை பிரபலப்படுத்தவும் ஊக்குவிக்கவும் கண்டுபிடிப்புகளுக்கான ஜனாதிபதி விருதுகளை நடத்துகிறது. இந்த ஆண்டு, காப்புரிமையின் வணிக அம்சத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

"கண்டுபிடிப்புகளுக்கான ஜனாதிபதி விருதுகள்" என்பது இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகும். இது காப்புரிமை பெற்ற புத்தாக்குனர்களின் கண்டுபிடிப்பு திறனை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன மற்றும் போட்டிக்கான விண்ணப்பங்கள் தேசிய அறிவுசார் சொத்து அலுவலகத்தால் வழங்கப்பட்ட காப்புரிமைகளின் அடிப்படையில் அமைந்திருக்கும். பொது பாதுகாப்பு, நலன் மற்றும் தேசிய பாதுகாப்பு, உணவு தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் மருந்தகம், பொதுப்பணி மற்றும் உள்கட்டமைப்பு பொறியியல், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம், பயன்பாட்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இரசாயனவியல் , பாரம்பரிய மருத்துவம், இயற்பியல், விவசாயம், ஆற்றல், போக்குவரத்து மற்றும் பொறியியல் உள்ளிட்ட 14 தொழில்நுட்ப துறைகளில் கவனம் செலுத்தி, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் குழுவால் மதிப்பீடு செயல்முறை மேற்கொள்ளப்படுகிறது

நடுவர் குழுவின் முடிவின்படி, ஒவ்வொரு தொழில்நுட்பத் துறையிலும் மதிப்பிடும் அளவுகோல்களை பூர்த்தி செய்யும் கண்டுபிடிப்புகளுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம் மற்றும் தகுதிக்கான விருதுகள் வழங்கப்படுகின்றன. மேலும், இந்தத் தொழில்நுட்பத் துறைகளில் அதிக திறன் கொண்ட கண்டுபிடிப்புக்கு ஆண்டின் சிறந்த கண்டுபிடிப்பு என்ற விருது வழங்கி கௌரவிக்கப்படும் .

2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்புகளுக்கான மதிப்பீடுகள், கோவிட்-19 தொற்றுநோய் நிலைமை போன்ற பல்வேறு காரணங்களால் தாமதமானது. அதன்படி, 2017 முதல் 2020 வரை 135 கண்டுபிடிப்புகளுக்கான மதிப்பீடுகள் முடிக்கப்பட்டுள்ளன. அனைத்து பூர்வாங்க நடவடிக்கைகளும் நிறைவடைந்து விருது வழங்கும் விழாவை நடத்த நாங்கள் தயாராக உள்ளோம். விழாவை நடத்துவதற்கு ஒரு சௌகரியமான திகதியானது அமைச்சின் ஊடாக கோரப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அவர்களின் வணிகத் திறனைக் கருத்தில் கொண்டு வணிகமயமாக்கலுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்க ஆணைக் குழு தயாராக உள்ளது.



අවසන් වටයේ නව නිපැයුම් විනිශ්චය

## 2.15 கண்டுபிடிப்பாளர்களுடன் சந்திப்புக்கள்

கண்டுபிடிப்பாளர்களுடன், அவர்களது கண்டுபிடிப்புகள் மற்றும் கண்டுபிடிப்புகள் தொடர்பான அவர்களின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதற்கு மூன்று சந்திப்புகள் இடம்பெற்றன . அதன்படி, அவர்களது சிக்கல்களுக்கு சாத்தியமான தீர்வுகளினை அதே நாளில் வழங்குவதற்கு ஆணைக்குழு தீர்மானித்தது .




## 2.16 தேசிய விஞ்ஞான தினத்தினை கொண்டாடுதல்

2023 ஆம் ஆண்டு நவம்பர் 8, 9 மற்றும் 10 ஆம் தேதிகளில் பொது மக்களிடையே கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கங்களினை மேம்படுத்துவதற்காக தேசிய அருங்காட்சியக வளாகத்தில் கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வினை ,இந்த ஆணைக்குழுவானது தேசிய விஞ்ஞான தினத்தினை கொண்டாட பயன்படுத்தியது. நிகழ்வின் போது எட்டு உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களுக்கு அவர்களது கண்டுபிடிப்புக்களினை விளம்பரப்படுத்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.





## 2.17 ஆணைகுழுவினை சர்வதேச ரீதியில் அங்கீகரித்தல்

இலங்கையின் புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, இரண்டு சர்வதேச சங்கங்களில் உறுப்பினராக உள்ளது, அவையாவன,சர்வதேச கண்டுபிடிப்பாளர்கள் சங்கம் (IFIA) மற்றும் உலக கண்டுபிடிப்புகள் மற்றும் அறிவுசார் சொத்துரிமை சங்கம் (WIIPA), இவை உலகளவில் கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கங்களினை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் ஆகும். இதன் மூலம் ஆணைக்குழுவின் சர்வதேச மட்டத்திலான உறவுகள் மேலும் வளர்ச்சியடைந்துள்ளன.

இந்த அங்கத்துவங்களைப் பெறுவதன் மூலம், சர்வதேச கண்டுபிடிப்புப் போட்டிகளில் இளைஞர்கள், திறந்தவெளி, பெண்கள் போன்ற பல்வேறு பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல பங்கேற்கும் அரிய வாய்ப்பை இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு பெற்றுள்ளது. இந்த நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் எனும் பொது அதற்குள். பயிற்சித் திட்டங்கள், கண்டுபிடிப்புகளின் வணிகமயமாக்கல், அறிவுசார் சொத்துரிமைகளைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழலுக்கு உகந்த கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் கண்டுபிடிப்புகள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களின் திட்டங்களுக்கு அவர்களின் இணையதளங்கள் ஊடாகவும்

அத்துடன் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் போன்ற அச்சு ஊடகங்கள் மூலம் விளம்பரம் வழங்குதல் ஆகியவை அடங்கும்.

மேலும் கண்டுபிடிப்புகள் பற்றிய சமீபத்திய தகவல்கள் பரப்பப்படுகின்றன. வெற்றி பெறும் கண்டுபிடிப்புகளுக்கு பதக்கங்கள் மற்றும் பரிசுகளும் வழங்கப்படும்.

அதுமட்டுமின்றி, விமான டிக்கெட்டுகள், போட்டிகளுக்கான தங்குமிட வசதிகள், கண்டுபிடிப்பு கண்காட்சிகளுக்கான பதிவு, கண்காட்சி அரங்குகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல் போன்றவை தொடர்பிலும் ஆதரவு வழங்கப்படுகிறது. இலங்கையின் கண்டுபிடிப்பாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் தமது கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குவதற்கு கிடைக்கப்பெறும் இந்த ஊக்குவிப்புக்கள் மற்றும் அங்கீகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கும் பெரும் பாக்கியமாகும்.

இந்த சர்வதேச சங்கங்களின் உதவியுடன், சர்வதேச புத்தாக போட்டியான சஹசக் நிமவும் போட்டியில் வெற்றி பெற்றவர்கள், ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும் வசதிகள் மூலம் உலகம் முழுவதும் நடத்தப்படும் சர்வதேச புத்தாக்க போட்டிகளின் அனுபவத்தைப் பெற தகுதியுடையவர்கள் ஆகின்றனர்.

### 2.18 தேசிய புத்தாக்குனர் தினம்

உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களைக் கௌரவிக்கும் வகையில் அவர்களுக்காக ஒரு தினமானது ஒதுக்கப்படல் வேண்டும் என்பதற்கு அமைவுற.ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதியானது "தேசிய கண்டுபிடிப்பாளர்கள் தினம்" என்று அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக 2016 ஆம் ஆண்டில், அறிவிக்கப்பட்டது. இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழுவின் முதலாவது ஆணையாளரும், குறிப்பிடத்தகுந்த சிவில் பொறியியலாளர், கண்டுபிடிப்பாளர் மற்றும் பல பொறியியல் நிறுவனங்களை நிறுவியவருமான கலாநிதி ஏ.என்.எஸ்.குலசிங்கவின் பிறந்தநாள் என்பதால் இந்த திகதி தனிச் சிறப்பு பெற்ற தினமாக கருதப்படுகிறது .

2023 ஆம் ஆண்டில், தேசிய கண்டுபிடிப்பாளர்கள் தினத்தை அக்டோபர் 26 ஆம் திகதி பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆணைக்குழு கொண்டாடியதுடன் இந்நிகழ்வில் கலந்துக்கொண்ட கௌரவ. கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, கௌரவ. இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், கல்வி அமைச்சின் செயலாளர் திரு.எம்.என்.ஆர்.ரணசிங்க, கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திருமதி திலகா ஜயசுந்தர ஆகியோர் கண்டுபிடிப்பாளர்களின் புத்தாக்கத் திறமைகளைப் பாராட்டினர்.

### 2.19 கண்டுபிடிப்புக்களினை மேம்படுத்துவதற்கான ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்

#### 2.19.1 “இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ” – You Tube

இந்த அலைவரிசையானது**,** வணிகத் திறன் கொண்ட கண்டுபிடிப்புகளுக்கு, உலகத்துடன் இணைவதற்கும்**,** கண்டுபிடிப்பினை வணிகமயமாக்கும் நோக்கத்துடன் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரவும் **,** மேலும் நவீன தொழில்நுட்பத்துடன் தொடர்புகொள்வதற்கும் வாய்ப்பளிக்கிறது .அதன்படி**,** புதிய கண்டுபிடிப்பாளர்கள் இந்த அலைவரிசை மூலம் புத்தாக்கம் **,** காப்புரிமை விண்ணப்ப செயல்முறை மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பல விடயங்களைப் பற்றிய அறிவைப் பெறலாம்.

100 க்கும் மேற்பட்ட கட்புல நாடாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன, மேலும் 1200 சந்தாதாரர்கள் உள்ளமையானது வெற்றிகரமானதொரு முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

2023 ஆம் ஆண்டில் அலைவரிசையானது 11,037 இனால் பார்வையிட்டதுடன், சந்தாதாரர்கள் 115 பேர்கள் ஆவார்கள

#### 2.19.2 “Inventor Champs" (“கண்டுபிடிப்பு சாம்பியன்கள்”) மாணவர்களுக்கான புத்தாக்க ஏற்பாடுகள்

6 முதல் 13 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களின் புத்தாக்கத் திறன்களை மேம்படுத்துவதற்காக இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு மற்றும் சாரதா ஊடக வலையமைப்பினால் “Inventor Champs” சிறப்பாக வடிவமைக்கப்பட்டது. மாணவர்களின் புத்தாக்க திறன்களினை இனம் கண்டு அவர்களின் திறமைகளை மேம்படுத்தி, இலங்கையில் புத்தாக்க கலாசாரத்தை உருவாக்குவதே , நிகழ்ச்சித்திட்டத்தின் முதன்மை நோக்கங்களாகும்.

பதிவு செய்ய தொடங்குவதற்கு முன், தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் அறிவுசார் உரிமைகளை (IP) ஆணைக்குழுவிடமிருந்து இருந்து பெறுவது கட்டாயமாகும்.

முதல் சுற்று மற்றும் பிற சுற்று போட்டிகள் மூலம் இறுதிச் சுற்றுக்கு பத்து கண்டுபிடிப்புகள் தேர்வு செய்யப்பட்டு, அதன்படி, முதல், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு அவை தெரிவு செய்யப்பட்டன.

இந்தப் போட்டியில் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கான பட்டறைகள், கள ஆய்வுகள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்துவதற்கான அடைகாப்பக வசதிகள் ஆகியவை அடங்கும் .மேலும் வெற்றியாளர்களுக்கு மதிப்புமிக்க விருதுகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன, மேலும் சந்தைகளுக்கு கண்டுபிடிப்புகளை முன்னிலைப்படுத்துவதற்கு உகந்த சூழல் உருவாக்கப்படுகிறது.

அதன்படி, ஆணைக்குழுவானது பாடசாலைகளுக்கு திறந்த வேண்டுகோளை விடுத்ததுடன் விண்ணப்பங்கள் ஊடாக 170 புதிய யோசனைகள் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டது .நிகழ்ச்சியின் தொடக்க நாளில் அதாவது
2023 , ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதியன்று கடுவெலவில் உள்ள "சாரதா ஊடக வலையமைப்பு " வளாகத்தில் " ஒருவருக்கு ஒருவர் என்ற ரீதியில் தொழில்நுட்ப ஆதரவு சிகிச்சை நிலையம் நடத்தப்பட்டது. மேலும், 2023 நவம்பர் மாதம் 16 ஆம் திகதியன்று ஜா-எலயில் உள்ள தேசிய எந்திரவியல் ,ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் அடைகாப்பகத்தில், மாணவர்களுக்கான புத்தாக்கப் பட்டறை நடத்தப்பட்டது. மாகாண மட்டத்திலிருந்து 90 கண்டுபிடிப்புகளைத் தெரிவு செய்து, ரூபவாஹினி ஒளிபரப்புக்கான வாய்ப்பை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.









නර්ඩ් ආයතනයේ දී පැවැති වැඩමුළුවේදී
සිසුන්ට 3D තාක්ෂණය පිළිබඳ දැනුම ලබාදුන් අවස්ථාව



## 2.20 ஊடகத்தின் ஆதரவு

இலங்கையில் புத்தாக்க கலாசாரத்தை உருவாக்குதல் என்ற வகையில், உள்ளூர் கண்டுபிடிப்புகளை பிரபலப்படுத்த வேண்டிய தேவையை பூர்த்தி செய்வதில் ஊடக செயற்பாடுகளுக்கு தனித்துவமான இடம் உள்ளது. எனவே, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது எப்போதும் விளம்பர ஊடகங்களுடன் ( மின்னணு ,அச்சு மற்றும் சமூக ஊடகங்கள்) போன்றவற்றுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதுடன் புத்தாக்கங்களினை ஊக்குவிக்க ஊடகங்களின் தன்னார்வ ஆதரவைப் பெறுவதற்கும் ஏற்ற வகையில் பணியாற்றுகிறது .

## 2.21 இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு - SPAR இலங்கை கருத்திட்டம்

இந்தத் திட்டம் உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களைக் கண்டறிந்து அவர்களது புதிய கண்டுபிடிப்புக்களினை மேலும் விருத்தி செய்வதற்கான ஆதரவையும் மற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் நுழைவதற்கான உதவியையும் வழங்குவதற்கு தொடங்கப்பட்டது. இப்போது இந்த நோக்கமானது யதார்த்தமாகி நான்கு கண்டுபிடிப்பாளர்களின் 14 தயாரிப்புகள் SPAR Sri Lanka பலபொருள் அங்காடி சங்கிலி மூலம் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.






## 2.22 மாதாந்த சந்தை “மெஹவர பியச ”

2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தங்கள் தயாரிப்புகளை விளம்பரப்படுத்தவும், அவர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் "மெஹேவர பியேசா" கண்காட்சியில் உள்ளூர் கண்டுபிடிப்பாளர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை விற்பனை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, ஐந்து கண்டுபிடிப்பாளர்கள் இந்த மாதாந்திர கண்காட்சியில் பங்கேற்று இந்த நிகழ்வின் மூலம் 620,000 வருமானத்தினை ஈட்டினர் .





## 2.23 உணவுகளுடன் தொடர்புடைய புதிய கண்டுபிடிப்புக்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்தல்

உணவுடன் தொடர்பான புதிய கண்டுபிடிப்புக்களினை வர்த்தகமயப்படுத்துவதற்காக மேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் (IDA -WP) இணைந்து ஒரு புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டது . அதன்படி மேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினது மாதிவெல காட்சியறையில் ஏழு தயாரிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டன.எதிர்காலத்தில் இந்த திட்டத்தின் மூலம் உணவு தொடர்பான பல கண்டுபிடிப்புக்களினை வர்த்தகமயமாக்க எதிர்பார்க்கப்படுகிறது .

## 2.24 “சதுடு பௌல்” (Sathutu Pawl) வியாபார சந்தை

“சதுடு பௌல்” எனப்படும் கல்வி மற்றும் வர்த்தச் சந்தையானது , உள்ளூர் வர்த்தகர்களின் 200 க்கும் மேற்பட்ட வர்த்தக கடைகள் மற்றும் 100 க்கும் மேற்பட்ட கல்விக் கடைகளின் பங்கேற்புடன் 2023 டிசம்பர் 25 முதல் 31 வரை கிரிந்திவெலவில் நடத்தப்பட்டது. .இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது பதினெட்டு புத்தாக்குனர்களுக்கு இந்நிகழ்வில் இலவசமாகப் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பமொன்றை வழங்கியுள்ளது . இதற்கமைய இந்த ஏழு நாட்களினுள் உள்நாட்டு புத்தாக்குனர்கள் 3.2 மில்லியன் ரூபா பெறுமதியான விற்பனை மற்றும் உற்பத்திகளுக்கான கட்டளைகளை பெற்றுக்கொள்ள முடிந்தது .மேலும் இந்த புத்தாக்குனர்களின் உற்பத்திகளுக்கு தேவையான விளம்பரத்தை கம்பஹா மாவட்டத்தில் வழங்குவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்ததுடன் இந்த செயற்பாட்டிக்கு கல்வி அமைச்சின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளது.



## 2.25 2023 ஆம் ஆண்டில் புத்தாக்குனர்களுக்கு ஆதரவு வழங்கல்

ஆணைக்குழுவானது 2023 ஆம் ஆண்டில் காப்புரிமை பெற்ற இருபத்தி ஏழு கண்டுபிடிப்பாளர்களுடன் நான்கு சந்தர்ப்பங்களில் சந்திப்புகளை நடத்தியதோடு அவர்களின் தயாரிப்புக்களினை வணிகமயமாக்கல் மற்றும் மேலும் விருத்தி செய்யப்படுவதற்கு அவர்களின் தேவைகள் குறித்து கலந்துரையாடியது .அவர்களில், பதினாறு கண்டுபிடிப்பாளர்கள் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ஆதரவைக் கோரினர் . இதில் நான்கு கண்டுபிடிப்பாளர்கள் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் ஏற்கனவே ஆதரிக்கப்பட்டவர்கள் மேலும் . எட்டு கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழுவிற்கு தங்கள் தேவைகளை குறித்து தெரியப்படுத்தியதனை தொடர்ந்து ஆணைக்குழு இப்போது ஆதரவை வழங்க உத்தேசம் கொண்டுள்ளது .

## 2.26 2023 ஆம் ஆண்டில் வர்த்தகமயப்படுத்துகை செய்யப்பட்ட தயாரிப்புக்களின் முன்னேற்றம்

2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட “சஹசக் நிமவும்” கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்கப் போட்டியின் மூலம் இனங்காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட கண்டுபிடிப்பாளர்கள் தற்போது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் பங்களிப்புச் செய்து வருகின்றனர்.

அதி புலமை சொத்து உரிமை பெற்றுக்கொள்ளப்பட்டதும் வணிகமயமாக்கப்பட்டதுமான கண்டுபிடிப்புக்களுக்கு சொந்தமான கண்டுபிடிப்பாளர்களுக்கு ஆணைக்குழு பல்வேறு ஆதரவுகளை வழங்கி வருகிறது. இவ்வாறு வழங்கப்படும் ஆதரவுக்குள், நிதி உதவி, சர்வதேச சந்தை வாய்ப்புகள், உள்நாட்டில் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்கான உதவி, புத்தாக்க விற்பனை வாய்ப்புகள் மற்றும் சோதனை அறிக்கைகளைப் பெறுவதற்கான உதவி ஆகியவை அடங்கும் . அதன்படி, திரு. எஸ். ஜே. சமரசேகரவின் **“Smart Power Guard”** கண்டுபிடிப்புக்கு ஆணைக்குழு ஆதரவு அளித்ததுடன் , 2023 ஆம் ஆண்டில் ரூபாய் 6,260,247 இனை ஈட்டக்கூடியதாக இருந்தது .




திரு ஆசிரி டில்ஹான் டி சில்வாவின் ஆறு கண்டுபிடிப்புகள் 2023 ஆம் ஆண்டில் ரூபாய் 2,057,490 வருமானத்தினை ஈட்டியதுடன் பல வழிகளில் ஆணைக்குழு இந்த கண்டுபிடிப்புக்கு தன் ஆதரவினை வழங்கியது.






(2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட" சஹசக் நிமவும் "கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்கப் போட்டியின் மூலம் அடையாளம் காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட புத்தாக்குனர்கள் தற்போது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு பங்களிப்பு செய்து வருகின்றனர்).திரு ஜயவர்தன வீரசிங்க என்ற புத்தாக்குனரால் கண்டுபிடிக்கப்பட்ட" பசளை பிரயோகியுடன் கூடிய விதை தூரப்பணம் ("seeder with fertilizer applicator")எனும் விவசாய சாதனத்தின் 45 அலகுகள் ரூபா 36.3 மில்லியனுக்கு போட்டி ஏல செயல்முறையின் ஊடாக விவசாய





அமைச்சுக்கு வழங்கப்பட்டதன் ஊடாக நாணயத்தின் வெளிப்பாய்ச்சல் தடுக்கப்பட்டதுடன் விவசாயக் கைத்தொழிலுக்கு பாரிய பங்களிப்பு செய்யப்பட்டது

"DASIS" விருதை பெற்ற ஒரு கண்டுபிடிப்பாளரான திரு. D. K. மஹிபால, தனது கைமுறையாக முந்திரி தயாரிக்கும் இயந்திரத்தை ஏற்றுமதி செய்து 20,000 USD ஏற்றுமதி வருவாயை ஈட்டியதுடன் இதன் மூலம் உள்ளூர் பொருளாதாரத்திற்கும் பங்களித்தார்.





## 2,27 மனித வள அபிவிருத்தி

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது அக ரீதியிலான புத்தாக்குனர்களுக்கு உயர் சேவையினை வழங்கும் மிகச்சிறந்த பணியில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனமாகும் கண்டுபிடிப்பாளர்களுக்கு உயர்தர மற்றும் திறமையான சேவையினை வழங்குவதற்காக ஊழியர்களின் செயல்திறன் மற்றும் திறன்களினை அதிகரித்தல் அவசியமாகும்.அதற்கமைய பணியாட்தொகுதியினர் அவரவர்களது விடய ரீதியாக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வழிநடத்தப்பட்டுள்ளனர்.

அதன்படி திறன் அபிவிருத்தி நிதியத்தினால் நடாத்தப்பட்ட "நிர்வாக உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் பற்றிய "நிகழ்நிலை அடிப்படையிலான பயிற்சி நிகழ்ச்சியில் ஒரு அதிகாரி பங்கு பற்றினார்.

### 2.28 முன்னைய 10 ஆண்டுகளில் நிதி ரீதியிலான சிறப்பம்சங்கள்

| வருடம் | நிதியியல் தகவல்கள் | |
|---|---|---|
| | ஒதுக்கீடு | செலவினம் |
| 2023 | 35.00 | 5.93 |
| 2022 | 30.0 | 9.10 |
| 2021 | 17.5 | 10.64 |
| 2020 | 40.00 | 4.63 |
| 2019 | 90.00 | 69.78 |
| 2018 | 120.00 | 84.33 |
| 2017 | 100.00 | 85.43 |
| 2016 | 60.00 | 47.45 |
| 2015 | 53.35 | 25.55 |
| 2014 | 40.00 | 21.42 |

**அட்டவணை 01: கடந்த 10 ஆண்டுகளுக்கான நிதி மீளாய்வு**




**உரு 02: நிதி நிலைமையானது ஒதுக்கீட்டில் ஒரு நூற்று வீதமாக காட்டப்பட்டுள்ளது**

| நிகழ்ச்சித்திட்டம் | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|
| கண்டுபிடிப்பு மானியத்திட்டம் | - | - | 153,845.00 | - | - |
| IAFM | - | 50,440.00 | 72,000.00 | - | - |
| பதவிநிலை உத்தியோகத்தர் செயற்றிறன் நிர்மாணம் | 7,500.00 | 85,500.00 | 533,750.00 | 270,000.00 | 352,315.00 |
| அடைகாப்பு நிலையங்கள் | - | - | 59,545.00 | - | - |
| கண்டுபிடிப்புக்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்தல் | 6,015.00 | 166,514.00 | 12,000.00 | - | - |
| விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மாகாண மட்டத்து நிகழ்ச்சித்திட்டங்கள் | 360,818.50 | - | - | 1,541,962.50 | 5,641,214.07 |
| கண்டுபிடிப்பாளர் – கண்டுபிடிப்பு மேம்படுத்துகை | 1,488,402.00 | 4,736,745.56 | 636,657.45 | 904,194.00 | 7,305,455.45 |
| சனாதிபதி விருகள் | 550,830.00 | 74,000.00 | 110,110.73 | - | 18,000.00 |
| சஹசக் நிமாவும் கண்காட்சி | 2,770,947.85 | 1,952,557.75 | 4,924,909.00 | 1,017,820.00 | 22,098,263.11 |
| புத்தாக்குனர் கழகங்களினை தாபித்தல் | 15,510.00 | 1,520,000.00 | 2,993,863.00 | | 1,910,377.00 |
| காப்புரிமை தொடர்பான உதவிகள் | 93,053.00 | 28,175.00 | - | 37,209.50 | 647,942.08 |
| FITI | - | 359,065.03 | 731,616.37 | 509,750.00 | - |
| இலக்கு செய்யப்பட்ட குழுவினருக்கான போட்டி | - | 131,250.00 | 413,379.00 | 344,970.00 | - |
| சர்வதேச கண்காட்சி | - | - | - | - | 20,121,249.67 |
| வலைத்தளம் | - | - | - | - | 3,803.25 |
| கண்டுபிடிப்பாளர் சாம்பியன்கள் (Inventor champs) | 636,352.50 | - | - | - | - |
| புத்தாக்குனர் தினம் | - | - | - | - | - |
| Innova Minds | - | - | - | - | 365,730.00 |
| சில்பசேனா | - | - | - | - | 11,318,382.70 |
| | **5,929,428.85** | **9,104,247.34** | **10,641,675.55** | **4,625,906.00** | **69,782,732.33** |

| நிகழ்ச்சித்திட்டம் | 2018 | 2017 | 2016 | 2015 | 2014 |
|---|---|---|---|---|---|
| கண்டுபிடிப்பு மானியத்திட்டம் | - | - | | - | - |
| IAFM | - | | | - | - |
| பதவிநிலை உத்தியோகத்தர் செயற்றிறன் நிர்மாணம் | 1,423,838.83 | 3,456,020.25 | 1,263,173.25 | 37,967.00 | 292,245.38 |
| அடைகாப்பு நிலையங்கள் | - | - | | - | - |
| கண்டுபிடிப்புக்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்தல் | | | 3,184,657.30 | - | 4,099,597.50 |
| விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மாகாண மட்டத்து நிகழ்ச்சித்திட்டங்கள் | 4,330,859.25 | 3,648,065.09 | 2,445,926.95 | 2,321,961.51 | |
| கண்டுபிடிப்பாளர் – கண்டுபிடிப்பு மேம்படுத்துகை | 12,364,874.79 | 11,566,054.30 | 1,541,187.75 | 88,420.00 | 1,847,704.09 |
| சனாதிபதி விருகள் | 3,666,072.00 | 548,605.00 | 4,006,728.74 | 472,004.89 | 2,161,368.64 |
| சஹசக் நிமவும் கண்காட்சி | 25,964,420.54 | 30,578,735.25 | 18,654,670.73 | 16,119,189.12 | 11,908,920.29 |
| புத்தாக்குனர் கழகங்களினை தாபித்தல் | | | | 3,677,101.98 | 23,219.00 |
| காப்புரிமை தொடர்பான உதவிகள் | 774,936.81 | 470,315.75 | 26,660.00 | | |
| FITI | - | | | | - |
| இலக்கு செய்யப்பட்ட குழுவினருக்கான போட்டி | - | | | | - |
| சர்வதேச கண்காட்சி | 16,175,756.15 | 16,050,906.88 | 5,790,159.49 | 2,795,759.73 | 1,050,197.24 |
| வலைத்தளம் | 21,122.28 | 21,122.28 | - | 37,887.59 | 38,071.26 |
| கண்டுபிடிப்பாளர் சாம்பியன்கள் (Inventor champs) | | | - | - | - |
| புத்தாக்குனர் தினம் | 8,501,653.55 | 5,833,221.99 | 662,500.00 | - | - |
| Innova Minds | 11,107,243.15 | 13,252,492.91 | 9,871,429.31 | - | |
| சில்பசேனா | - | - | - | - | 11,318,382.70 |
| | **84,330,777.35** | **85,425,539.70** | **47,447,093.52** | **25,550,291.82** | **21,421,323.40** |


35.00
30.00
25.00
20.00
15.00
10.00
5.00
-
2014
2015
2016
2017
2018
2019
2020
2021
2022
2023
ஆரம்பகால விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் & மாகாண நிகழ்ச்சிகள்
கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்பு ஊக்குவிப்பு திட்டம்
සයසක් නිමැවුම් ප්‍රදර්ශනය

**3. கூட்டுறவு ஆளுமை அறிக்கை**

(i) 2023 ஆம் ஆண்டில், ஆணைக்குழு 10 முகாமைத்துவ சபை கூட்டங்களை நடத்தியது. ஆணையாளர் பதவி வெற்றிடமாக இருந்ததால் மே மற்றும் ஜூன் மாதங்களில் ஆணைக் குழுவினால் முகாமைத்துவ கூட்டங்களை நடத்த முடியவில்லை.

(ii) **2023ஆம் ஆண்டிற்கான கொள்கைத் தீர்மானங்கள்**

- "சஹசக் நிமவும்" கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்க கண்காட்சியில் சிறந்த கண்டுபிடிப்புக்களினை அடையாளம் கண்டு அங்கீகரிக்க ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி சிறந்த கண்டுபிடிப்பு எனும் போது அதற்குள் இறக்குமதி மாற்றீட்டிற்கான சிறந்த மாற்று கண்டுபிடிப்பு, மிகவும் குறிப்பிடத்தக்க சமூக தாக்கம் கொண்ட கண்டுபிடிப்பு மற்றும் சிறந்த நிலைத்தன்மை, சுற்றுச்சூழல் நட்பு மற்றும் வணிக மதிப்பு கொண்ட கண்டுபிடிப்பு ஆகியவை அடங்கும்.

- சாலை பயன்படுத்துவோரின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்த தேசிய சாலை பாதுகாப்பு மன்றத்துடன் கூட்டு அணுகுமுறையை ஊக்குவித்தல்.

- அநுசரனைகளினை பயன்படுத்துவதன் நிகழ்ச்சி திட்டங்களின் செலவைக் குறைத்தல்

- கூட்டு திட்டங்களின் மூலம் கண்டுபிடிப்பாளர்கள் பெறக்கூடிய நன்மைகளை மேம்படுத்துதல்.

## இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

### டிசம்பர் 31 இல் உள்ளவாறான
### நிதியியல் நிலைமை பற்றிய கூற்று

| | குறிப்பு | 2023<br>இல. ரூபா. | 2022<br>இல. ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | |
| காசும் வங்கி மீதியும் | 1 | **78,216,559** | 67,662,970 |
| பண்டிகை முற்பணம் | | **-** | 1,250 |
| கடன்பட்டோர் | 2 | **15,322,609** | 15,337,063 |
| தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையிடமிருந்து பெறப்பட வேண்டியவை | | **7,560** | 7,560 |
| வேறு முற்பணம் | | **136,633** | 136,633 |
| முற்கொடுப்பனவு | 3 | **580,614** | 520,856 |
| *(கழிக்க(* ஐயக்கடன் *ஒதுக்கீடு (100%)* | 4 | **(9,602,964)** | (9,602,964) |
| ஏனைய பெறுகைகள் | | **7,100** | 167,930 |
| மீளளிக்கத்தக்க வைப்புகள் | 5 | **7,000** | 2,407,000 |
| அனர்த்த கடன் | | **925,187** | 805,962 |
| கொவிட் 19 நிகழ்ச்சித்திட்டம் பற்றிய கடன்கள் | | **460,634** | 646,960 |
| இலங்கை புத்தாக்குனர் நிதியத்திடமிருந்து கடன்கள் | | **606,313** | 754,820 |
| IAFM-SL கடன் | | **1,160,400** | 2,660,400 |
| எரிபொருள் வைப்பு | | **150,000** | 100,000 |
| டீ சேர்ட் - இருப்பு | 6 | **-** | 320,280 |
| காகிதாயிகள் இருப்பு | 6 | **484,001** | 595,115 |
| | | **88,461,646** | **82,521,836** |
| **நடப்பல்லாத சொத்துக்கள்** | | | |
| இலங்கை புத்தாக்குனர் நிதியத்திடமிருந்து கடன்கள் | | **578,828** | 1,180,141 |
| IAFM-SL கடன் | | **2,512,200** | 3,672,600 |
| அனர்த்த கடன் | | **2,330,664** | 2,499,927 |
| சொத்து மற்றும் கருவிகள் | 7 | **26,396,518** | 39,780,730 |
| | | **31,818,211** | **47,133,397** |
| **மொத்த சொத்துக்கள்** | | **120,279,857** | **129,655,233** |
| **நிதியம் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **நடப்பு பொறுப்புக்கள்** | | | |
| கடன் கொடுத்தோர் | 8 | **1,171,664** | 2,160,664 |
| நிலுவை செலவினங் கள் | 9 | **5,142,844** | 7,146,531 |
| | | **6,314,508** | 9,307,195 |
| **நடப்பல்லாத பொறுப்புக்கள்** | | | |
| மகாவலி கருத்திட்ட ஒதுக்கீட்டு | 10 | **6,555,425** | 6,558,705 |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 11 | **5,406,337** | 4,423,824 |
| IAFM-SL | 12 | **36,472,155** | 36,472,155 |

| | | | |
|---|---|---|---|
| தேசிய அடைகாப்பக நிலைய நிதியம் | 13 | **22,930,703** | 30,426,293 |
| அரச மூலதன மானியம் | 14 | **3,867,728** | 5,304,071 |
| இலங்கை புத்தாகுனர் நிதியம் | 15 | **12,837,184** | 12,837,184 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **94,384,040** | **105,329,427** |
| **தேறிய சொத்துக்கள்** | | **25,895,817** | **24,325,806** |
| **தேறிய சொத்துக்கள்/உரிமையண்மை** | | | |
| திரட்டப்பட்ட நிதியம் | | **4,395,817** | 2,825,806 |
| மீள்மதிப்பீட்டு மிகை | | **21,500,000** | 21,500,000 |
| **மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமையாண்மை** | | **25,895,817** | **24,325,806** |

அடைப்பு குறிக்குள் இருக்கும் இலக்கங்கள் கழி க்கப்படவேண்டியவை

முக்கிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பக்கங்கள் 6 – 14

டி.எ. சரத்சந்திர

உதவிப் பணிப்பாளர் (நிதியியல்)

என்.என்.டபிள்யு.
தொலவத்த
பணிப்பாளர்/சிரேட்
ட நிறைவேற்று
அலுவலர்

**இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரித்து முன்னளிப்பு செய்தல் பணிப்பாளர் பொறுப்பாகும்.**
**இந்த நிதிக்கூற்றுக்களாவன, பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதுடன் அவர்கள் சார்பில் கையொப்பமிடப்பட்டுள்ளது**

**எஸ்.கே.சிறில் சுதுவெல்ல**

**ஆணையாளர்**

**கல்பனி இராஜபக்ச**

**உதவி ஆணையாளர்**

**டி.டி.ஆனந்த நாமல்**

**உதவி ஆணையாளர்**

**2024 பெப்ரவரி 26**

**கொழும்பு**

**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**

**டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதியியல் செயலாற்றுகை பற்றிய கூற்று**

| | குறிப்பு | 2023<br>இல. ரூபா. | 2022<br>இல. ரூபா. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| அரச பங்களிப்பு | | | |
| - நடப்பு | 16 | 43,023,000 | 49,400,000 |
| - கருத்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம் | 20 | 5,921,929 | 9,018,748 |
| - செயற்றிறன் நிர்மாணம் | | 7,500 | 85,500 |
| மூலதன மானியம் கடன் தீர்வு – நிலையான சொத்துக்கள் | 7 | 5,556,914 | 5,567,670 |
| அடைகாப்பக நிதிய கடன் தீர்வு - இயந்திரம், கருவிகள் | 7 | 7,495,590 | 7,495,590 |
| ஏனைய வருமானம் | 17 | 639,658 | 1,638,282 |
| **மொத்த வருமானம்** | | **62,644,590** | **73,205,790** |
| **செலவினங்கள்** | | | |
| தனி ஆள் வேதனாதிகள் | 18 | 18,995,451 | 20,692,859 |
| நிர்வாகம் மற்றும் தாபிப்பு செலவினங்கள் | 19 | 22,506,555 | 24,871,009 |
| பெறுமானத் தேய்வு - நிலையான சொத்துக்கள் | 7 | 13,052,503 | 13,063,259 |
| பணிக்கொடை | 11 | 1,578,608 | 554,030 |
| புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினம் | 20 | 5,921,929 | 9,018,748 |
| ஏனைய செலவினங்கள் | 21 | 600,130 | 13,436 |
| **மொத்த செலவினம்** | | **62,655,176** | **68,213,342** |
| **வருடத்திற்கான மிகை/(நட்டம்)** | | **(10,586)** | **4,992,448** |

முக்கியமான கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன இந்த நிதிக் கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பக்கங்கள் 6 -15.

## இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு உரிமையாண்மையில் மாற்றம் பற்றிய கூற்று

| | குறிப்பு | மீள் பெறுமான மிகை<br>இல. ரூபா. | திரட்டப்பட்ட நிதியம்<br>இல. ரூபா. | மொத்த ஒப்புரவு<br>இல. ரூபா. |
|---|---|---|---|---|
| 2022 ஜனவரி 01 இல் உள்ளவாறான மிகுதி | | 21,500,000 | (2,382,643) | 19,117,357 |
| காசோலைகள் இரத்து | | | 216,000 | 216,000 |
| 2022 ஆம் ஆண்டிற்கான மிகை/(நட்டம்) | | - | 4,992,449 | 4,992,449 |
| **2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | | 21,500,000 | 2,825,806 | 24,325,806 |
| முன்னைய வருட சீராக்கல் - 2022 | | | | |
| பெறுமானத்தேய்வு | | | (14,205) | (14,205) |
| **2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி (மீள் குறிப்பீடு )** | | **21,500,000** | **2,811,601** | **24,311,601** |
| 2023 ஜனவரி 01ஆம் திகதியில் உள்ளவாறான மிகுதி | | 21,500,000 | 2,811,601 | 24,311,601 |
| கொடுப்பனவு இரத்து – முன்னைய வருடங்கள் | | | 1,594,803 | 1,594,803 |
| 2023 ஆம் வருடத்திற்கான மிகை/(நட்டம்) | | | (10,586) | (10,586) |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | | **21,500,000** | **4,395,817** | **25,895,818** |

முக்கியமான கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன இந்த நிதிக் கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பக்கங்கள் 6 -15.

**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**

**டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான காசோட்டக் கூற்று**

| | குறிப்பு | 2023<br>இல. ரூபா | 2022<br>இல. ரூபா |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| மிகை/(நட்டம்) | | (10,586) | 4,992,449 |
| **காசல்லாத பெயர்ச்சிகள்** | | | |
| பெறுமான தேய்வு | 7 | 13,052,503 | 13,063,259 |
| கருத்திட்டங்கள்/நிகழ்ச்சித்திட்டங்கள் மூலதன மானியத்தில் பிற்போடப்பட்ட வருமானம் | 20 | (5,921,929) | (9,018,748) |
| பதவியணி செயற்றிறன் நிர்மாணத்தில் பிற்போடப்பட்ட வருமானம் | | (7,500) | (85,500) |
| மூலதன மானிய கடன் தீர்வு - நிலையான சொத்துக்கள் | | (13,052,503) | (13,063,259) |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 11 | 1,578,608 | 554,030 |
| விற்பனை நட்டம் | | 314,105 | 13,436 |
| விற்பனை இலாபம் | | (18,102) | - |
| **சீராக்கங்களாவன :** | | | |
| கடன்பட்டோரில் மாற்றம் | | - | (3,940,183) |
| காகிதாயிகள் இருப்பில் மாற்றம் | | 111,114 | (208,255) |
| T - சேர்ட்டுக்கள் இருப்பில் மாற்றம் | | 320,280 | 94,200 |
| முற்பண கொடுப்பனவில் மாற்றம் | 3 | (59,758) | 947,797 |
| பண்டிகை முற்பணத்தில் மாற்றம் | | 1,250 | - |
| நிலுவை செலவினத்தில் மாற்றம் | | (2,003,687) | 4,944,558 |
| மீளளிக்கத்தக்க வைப்பில் மாற்றம் | | 2,400,000 | - |
| எரிபொருள் வைப்பில் மாற்றம் | | (50,000) | - |
| ஏனைய பெறுகைகளில் மாற்றம் | | 160,830 | (167,930) |
| கடன் கொடுத்தோரில் மாற்றம் | | (989,000) | 844,000 |
| | | (4,174,377) | (1,030,147) |
| பணிக்கொடை கொடுப்பனவு | | (596,095) | (267,265) |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | | **(4,770,472)** | (1,297,412) |
| **முதலிட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு | 7 | - | (441,068) |
| மகாவலி கருத்திட்ட செலவினம் | | (3,280) | (564,212) |

| | | |
|---|---|---|
| சொத்து விற்பனை வரும்படி | 21,500 | 1,000 |
| புத்தாக்குனர் நிதியத்திலிருந்து கடன் மீள் கொடுப்பனவு | 161,000 | 12,000 |
| IAFM-SL இலிருந்து கடன் மீள் கொடுப்பனவு | 3,450,000 | 2,136,800 |
| அனர்த்தக்கடன் வழங்குகை | (1,028,480) | (543,474) |
| அனர்த்தக்கடன் மீள் கொடுப்பனவு | 1,078,518 | 1,108,042 |
| பிழை திருத்தம் | - | (54,973) |
| காசோலை இரத்து | 1,594,803 | 216,000 |
| முன்னைய வருடம் தொடர்பில் பெற்ற பணம் | - | 49,520 |
| IAFM-SLகீழ் கடன் | - | (5,950,000) |
| **முதலீட்டு செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டவைகளில் இருந்து பிறப்பிக்கப்பட்ட தேறிய பணம்** | **5,274,060** | (4,030,365) |
| **நிதி செயற்பாடுகளில் காசோட்டம்** | | |
| மூலதன மானியம் | 10,050,000 | 10,070,000 |
| மகாவலி கருத்திட்டம் | - | 588,891 |
| **நிதி செயற்பாடுகளில் மூலம் பிறப்பிக்கப்பட்ட காசு** | **10,050,000** | 10,658,891 |
| **வருட காலப்பகுதியில் காசும் காசிற்கு சமமானவற்றிலும் அதிகரிப்பு குறைவு/** | 10,553,589 | 5,331,114 |
| **வருட தொடக்கத்தில் காசும் காசிற்கு சமமானவையும்** | 67,662,970 | 62,331,856 |
| வருட இறுதியில் காசும் காசிற்கு சமமானவையும் | **78,216,559** | **67,662,970** |
| **காசும் காசிற்கு சமமானவையும் பகுப்பாய்வு** | | |
| கணக்கிலக்கம் 033-1-001-0-1791066 | 24,429,746 | 19,799,754 |
| கணக்கிலக்கம் 033-1-001-2-1791065 | 51,530,220 | 45,510,115 |
| கணக்கிலக்கம் 204402131791066 | 2,256,593 | 2,353,101 |
| | 78,216,559 | 67,662,970 |

6 - 15 பக்கங்கள் வரையிலுமுள்ள முக்கியமான கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

## இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
## வரவு செலவு திட்ட மற்றும் உண்மையான நிதியங்களை ஒப்பிடல்

இல. ரூபா.

| | அனுமதிக்கப்பட்ட பாதீடு | | திறை சேரியினால் விடுவிக்கப்பட்ட நிதியம் | |
|---|---|---|---|---|
| | **2023** | 2022 | **2023** | 2022 |
| நடப்பு | **50,000,000** | 50,500,000 | **43,023,000** | 49,400,000 |
| மூலதனம் | **35,000,000** | 30,000,000 | **10,050,000** | 10,070,000 |
| மொத்தம் | **85,000,000** | 80,500,000 | **53,073,000** | 59,470,000 |

| வருடம் | அரச பங்களிப்பு மூலதனம் (இல. ரூபா |
|---|---|
| 1991 | 163,050 |
| 1992 | 1,700,000 |
| 1993 | - |
| 1994 | 250,000 |
| 1995 | 196,000 |
| 1996 | 113,500 |
| 1997 | 757,000 |
| 1998 | 1,700,000 |
| 1999 | 290,000 |
| 2000 | 4,500,000 |
| 2001 | 2,870,000 |
| 2002 | 700,000 |
| 2003 | 2,500,000 |
| 2004 | 621,000 |
| 2005 | 5,997,000 |
| 2006 | 33,991,000 |
| 2007 | 37,100,000 |
| 2008 | 24,106,000 |
| 2009 | 15,765,000 |
| 2010 | 4,500,000 |
| 2011 | 6,151,010 |
| 2012 | 21,562,000 |
| 2013 | 17,061,000 |
| 2014 | 40,000,000 |
| 2015 | 30,269,992 |
| 2016 | 57,248,655 |
| 2017 | 73,133,822 |
| 2018 | 85,750,000 |
| 2019 | 58,000,000 |
| 2020 | 24,538,000 |
| 2021 | 7,900,000 |
| 2022 | 10,070,000 |
| 2023 | 10,050,000 |

*பிரதானமான கணக்கியற் கொள்கைகள்*

**1. ஆணைக்குழு பற்றிய தகவல்கள்**

**1.1 அறிக்கை செய்யும் நிறுவகம்**

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தினூடாக இலங்கை சார் புத்தாக்குனர்களையும் மற்றும் அதனோடிணைந்த நடவடிக்களையும் மேம்படுத்தி மற்றும் உற்பத்தி செய்யும் பொருட்டு ஒரு நியதிச் சட்ட சபையாக தாபிக்கப்பட்டது. ஆணைக்குழுவானது கல்வி அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் செயற்படுகின்றது. 2022 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவானது கொழும்பு 05 இல் அமைந்துள்ள “ மெஹெவர பியச” கட்டிடத்தில் 05 அது தளத்தில் அமைந்துள்ளது .

**2. தயாரிப்பின் அடிப்படை**

பிரதானமாக கணக்கியற் கொள்கைகள் உள்ளடங்கலாக இலங்கை அரச துறை சார் கணக்கியற் கட்டளைச் சட்டங்கள்(SLPAS) மற்றும் அதனுடன் தொடர்புடைய நியதிச் சட்ட தேவைப்பாடுகள் ஆகியவை உள்ளடங்கலாக நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட அடிப்படையினை இப்பிரிவு எடுத்துக்கூறுகின்றது.

**2.1 ஒப்புமை கூற்று**

ஆணைக்குழுவினது 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற வருடத்திற்குரியதும் அத்திகதியில் உள்ளவாறானதுமான நிதியியல் கூற்றுக்களாவன, கணக்காய்வாளர் நாயகம் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு என்பனவற்றின் பங்களிப்புடன் இலங்கை பட்டய கணக்கறிஞர் நிறுவகத்தினை சார்ந்த பொதுத்துறை கணக்கியற் கட்டளைச்சட்ட குழுவினால் முன்வைக்கப்பட்ட இலங்கை பொதுத்துறை கட்டளைச்சட்டங்களிற்கு அமைவுற தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிதிக்கூற்றுக்களாவன கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயங்களை உள்ளடக்கியுள்ளது

- நிதிச் செயலாற்றுகை கூற்று
- ஆணைக்கழு பற்றிய விபரங்களைத் தரும் நிதியியல் நிலை பற்றிய கூற்று
- மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் ஆணைக்குழுவின் ஒப்புரவில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக்கூறும் வகையில் தயாரிக்கப்பட்ட ஒப்புரவின் மாற்றம் பற்றிய கூற்று
- ஆணைக்குழுவின் காசு பிறப்பிக்கக்கூடிய திறமை மற்றும் ஆணைக்குழுவின் தேவைப்பாடுகளுக்கு அமைவுற அவை பயன்படுத்தப்பட்டமை போன்ற விபரங்களினை தருகின்ற காசோட்டக் கூற்று
- கணக்கியற் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க விபரங்களை உள்ளடக்கிய வகையில் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிக்கான குறிப்புக்கள்.

**2.2 நிதியியல் கூற்றுக்களுக்கான பொறுப்பு**

**2.3**

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளைச் சட்டங்களிலுள்ள ஏற்பாடுகளிற்கு அமைவுற, ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னளிப்பு என்பனவற்றுக்கு பணிப்பாளர் சபையே பொறுப்பாகும்

**2.4 அளவீட்டின் அடிப்படை**

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களான அட்டுறு அடிப்படையில் வரலாற்று கிரய முறையில் மாற்றங்கள் எதுவும் செய்யப்படாது நிலையான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதோடு பணவீக்கத்துடன் தொடர்புடைய காரணிகள் தொடர்பில் எதுவித சீராக்கங்களும் செய்யப்படவில்லை.

**2.5 நாணய செயற்பாடும் அதனது முன்னளிப்பும்**

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களாவன இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் இதுவே நிறுவகத்தின் செயற்பாடுகள் நிமித்தம் பயன்படுத்தப்படும் நாணயமாகும். நிதியியல் ரீதியிலான தகவல்களாவன இலங்கை ரூபாயில் முன்னளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**2.6 திரவியத் தன்மையின் பாவனை, ஈடு செய்தல் மற்றும் முழு நாணயமாக்குதல்**
**2.5.1 திரவியங்களும் மற்றும் கூட்டுத் தொகையும்**

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளைச்சட்டங்கள் (SLPSAS) 1 இல் நிதியியல் கூற்றுக்களினை அனுமதித்தல் என்பதில் அனுமதிக்கப்பட்டதற்கு அமைவுற, ஒரே தன்மையிலான உருப்படிகளைக் கொண்ட ஒவ்வொரு திரவிய வகுதியும் நிதிக் கூற்றுக்களில் தனியாக முன்னளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஒரே தன்மையினது அல்லாத உறுப்படிகள் மற்றும் செயற்பாடுகள் என்பன அவை திரவிய வகுதிகளாக இல்லாத போதிலும் அவை தனித்தனியாக முன்னளிப்பு செய்யப்படுகின்றது.

**2.5.2 ஈடு செய்தல்**

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளைச்சட்டங்களில் அனுமதிக்கப்பட்டாலேயன்றி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் வருமானம் மற்றும் செலவினம் என்பன நிதியியல் கூற்றுக்களில் ஈடு செய்யப்படவில்லை .

**2.5.3.முழு நாணயமாக்குதல்**

"நிதியியல் கூற்றுக்களில் தரப்பட்டுள்ள தொகைகளாவன அண்மித்த ரூபாயிற்கு முழு நாணயமாக்குதல் செய்யப்பட்டுள்ளது"

**2.7 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு**

ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களாவன தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**2.8 அறிக்கை செய்யும் காலப்பகுதிக்குப்பின் நிகழ்ந்த நிகழ்வுகள்**

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளை சட்டங்கள் (SLPSAS) 6 இற்கு அமைவுற அறிக்கை செய்யப்பட்ட திகதிக்கும் மற்றும் நிதியியல் கூற்றுக்கள் வெளியீடு செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட திகதிக்கும் இடையில் இடம் பெற்ற அனுகூல மற்றும் பிரதிகூல நிகழ்வுகள், அறிக்கைசெய்யப்பட்ட பின் நிகழ்ந்த நிகழ்வுகளாகக் கருதப்படும்.

இதனடிப்படையில் அறிக்கை செய்யப்பட்ட திகதிக்குப்பின் எதுவித நிகழ்வுகளும் இடம் பெறவில்லை

**3. வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்ளை சட்டம் (SLPSAS) 5 இற்கு அமைவுறகொடுக்கல் வாங்கல் இடம் பெற்ற போது நிலவிய நாணய பரிமாற்ற வீதத்தின் அடிப்படையில் வெளிநாட்டு பரிமாற்று வீதத்திற்குட்பட்ட சகல கொடுக்கல் வாங்கல்களும் இலங்கை ரூபாயிற்கு அதாவது இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் செயற்படும் நாணயத்திற்கு மாற்றப்பட்டன .

**4. சொத்து மற்றும் கருவிகள்**

**4.1 அங்கீகரிக்கப்படும் அடிப்படை**

திருத்தி பாவிக்கக்கூடியதும் அருவ சொத்துக்களாவாக இருக்கின்ற சொத்து மற்றும் கருவிகளாவன. ஒரு வருடத்திற்கும் அதிகமாக பாவிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**4.2 அளவீட்டின் அடிப்படை**

ஒரு சொத்தாக இனம் காணப்படும் சொத்து ஆதனம் மற்றும் கருவிகள் என்பன ஆரம்பத்தில் அதன் கொள்விலையில் மதிப்பீடு செய்யப்படும் கொள்விலை என்னும் போது அதற்குள் அச் சொத்தை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்டசெலவினம் மற்றும் அதைத் தொடர்ந்து அச் சொத்திற்கு புதிதாக ஒரு பாகத்தை சேர்க்கவோ அல்லது ஒரு பாகத்தை பிரதியீடு செய்யவோ ஏற்பட்ட செலவினம் என்பன அதற்குள் உள்ளடங்கும் .

கணணி கருவிகளினை பொறுத்தவரையில் அக் கணணியின் செயற்பாட்டுடன் தொடர்புற்ற வகையில் கொள்வனவு செய்யப்படும் மென்பொருள் தொடர்பில் செலவிடப்படும் செலவினமும் அக் கணணியின் கொள்விலையுடன் சேர்க்கப்படும்.

சொத்து மற்றும் கருவிகளின் பாகங்களாவன வேறுபட்ட பாவணை காலத்தை கொண்டிருப்பின் அவை குறிப்பிட்ட அந்த சொத்து மற்றும் கருவிகளினது தனிப்பட்ட உறுப்படிகளாக (பிரதான ஆக்கக்கூறுகள்) கருதப்படும்.

இந்த சொத்து மற்றும் கருவிகள் தொடர்பில் இடம் பெற்ற திருத்தற் மற்றும் பேணல் செலவினங்கள் அந்தந்த காலப்பகுதிக்கான இலாப மற்றும் நட்ட கணக்கில் பதியப்படும். பிரதான திருத்தற் செலவினங்களாவன, அந்த சொத்தின் நடப்புபெறுமதியினை அதிகரிக்கும் பொருட்டு அல்லது எதிர்கால பொருளில் அனுகூலங்களினை கருத்திற் கொண்டு அக் குறிப்பிட்ட சொத்தின் கொள்விலைப் பெறுமானத்தின் ஒரு பகுதியாக கருதப்படும் . பிரதான திருத்தற் செலவினங்கள் அச்சொத்தின் எஞ்சியுள்ள பாவணை காலத்தை கருத்திற் கொண்டு பெறுமானத் தேய்விற்கு உட்படுத்தப்படும்.

**4.3 மீள் மதிப்பீடு**

2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், 31 ஆம் திகதியில் இருந்து வாகன வகையினை சார்ந்த சொத்துக்கள் தொடர்பில் மீள் மதிப்பீட்டு முறையானது பயன்படுத்தப்பட்டது.வாகன வகையினை சார்ந்த சொத்துக்களாவன நியாயமானதொரு விலையில் பதிவு செய்யப்படிருந்தன.மீள் மதிப்பீட்டு மிகையானது உரிமையாண்மையில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

### 4.4 அங்கீகாரமின்மை

சொத்து மற்றும் உபகரணங்களை அகற்றும்போது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது அவற்றுக்கான அங்கீகாரம் நீக்கப்படுவதனால் ஏற்படும் எந்த இலாபம் அல்லது நஷ்டமானது ( சொத்தின் விற்பனை விலைக்கும் மற்றும் பின் கொண்டு செல்லும் தொகைக்கும் இடையே உள்ள வித்தியாசம் ) சொத்தின் அங்கீகாரம் நீக்கப்பட்ட ஆண்டின் 'பிற வருமானம் அல்லது பிற செலவுகளில்' அங்கீகரிக்கப்படுகிறது .

### 4.5 பெறுமானத் தேய்வு

சொத்து மற்றும் கருவிகளின் ஒவ்வொரு பகுதியினதும் மதிப்பீட்டு பாவனைக் காலத்தை கருத்திற் கொண்டு நேர்கோட்டு முறையில் கணிப்பீடு செய்து இலாப நட்ட கணக்கில் பதியப்படும்.

சொத்துக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பாவனை2022/01/01 இல் இருந்து மீள் நோக்கப்பட்டுள்ளது .

நடப்பு மற்றும் ஒப்புமை வருடங்களிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பாவனை காலமானது வருமாறு .

| **சொத்தின் வகை** | **வருட வீதம்** | **காலப் பகுதி (வருடங்கள்)** |
|---|---|---|
| அலுவலக தளபாடம் | 5% -10 % | 10-20 |
| அலுவலக கருவிகள் | 10%-20% | 05- 10 |
| பெயர் பலகைகள் | 6 2/3% | 15 |
| வாகனங்கள் | 20% | 05 |
| ஊடக கருவிகள் | 10% | 10 |
| தொலைக்காட்சி மற்றும் கட்புல நாடா | 12.5% | 08 |
| அலுவலக பொருத்துக்கள் | 10% | 10 |
| அடைகாக்கும் இயந்திரங்கள் | 20% | 05 |

2014 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து வருடாந்த நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்படுமிடத்து இலங்கைபொதுத்துறை கணக்கியற் கட்ளைச் சட்டம் (SLPSAS) 7 பயன்படுத்தப்படுகின்றது

### 4.6. முற்றுமுழுதாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் கருவிகள்

முற்றுமுழுதாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதும் நிதியியல் நிலமைக் கூற்றில் உள்ளவாறான திகதியில் இன்னமும் பாவனையில் உள்ளதுமான ஆணைக்குழுவினது சொத்துக்கள் கருவிகள் பற்றிய விபரங்கள் வருமாறு

| **டிசம்பர் 31இல் உள்ளவாறாக** | **2023 இலங்கை ரூபாய்** | 2022 **இலங்கை ரூபாய்** |
|---|---|---|
| அலுவலக தளபாடம் | **421,580** | 489,885 |
| அலுவலக கருவிகள் | **1,128,872** | 3,256,497 |
| ஊடக கருவிகள் | - | 1,127,435 |
| தொலைக்காட்சிமற்றும் கட்புல நாடா | **107,850** | 107,850 |
| **மொத்தம்** | **1,658,302** | 4,981,667 |

### 4.7. பாவனையிலிருந்து ஓய்வுபெற்றசொத்து மற்றும் கருவிகள்

ஆணைக்குழுவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் கருவிகளாவன அறிக்கை செய்யும் திகதியில் பாவனையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளது

| டிசம்பர் 31 இல் உள்ளவாறாக | **2023**<br>**இலங்கை ரூபாய்** | 2022<br>**இலங்கை ரூபாய்** |
|---|---|---|
| அலுவலக தளபாடம் | **-** | 19,750 |
| அலுவலக கருவிகள் | **-** | 194,000 |
| பெயர் பலகைகள் | **-** | - |
| அலுவலக பொருத்துக்கள் | **38,000** | 38,000 |
| **மொத்தம்** | **38,000** | 251,750 |

### 5. வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டம் – ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

சம்மந்தப்பட்ட நியதிச்சட்ட மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவுற, ஊழியர்கள் ஊழிய சேமலாப நிதிச்சட்டம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு சட்டத்திற்கு உரித்துடையவர்கள் ஆவார்கள். ஊழியர் சேமலாபத்தை பொருத்தவரையில், ஆணைக்குழுவும் மற்றும் ஊழியர்களும் முறையே ஊழியர் சம்பளத்தில் 15% மற்றும் 10% இனை ஊழியர்களின் சேமலாபநிதியத்திற்கு பங்களிப்பு செய்யும் அதே வேளையில் ஊழியர் நம்பிக்கை பொறுப்புநிதியத்திற்கு ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் 3% இனை ஆணைக்குழு பங்களிப்பு செய்யும்.

### 6. ஓய்வூதிய நன்மைகள் பற்றிய கடப்பாடு

**பணிக்கொடை**

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்திற்கு அமைவாக ஊழியர்களுக்கு செலுத்தப்படற்பாலதான பணிக்கொடையை வழங்குவதற்காக சேவையின் முதலாம் ஆண்டிலிருந்து கணக்குகளில் ஒழுங்கு செய்யப்படுகிறது.

### 7.நிதியம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு அரசின் பங்களிப்பானது அரசின் வருடாந்த மதிப்பிட்டில் இரு வகுதிகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அவையாவன

1. நடப்பு செலவினத்திற்கான நிதியம்
2. மூலதன செலவினத்திற்கான நிதியம்

ஆணைக்குழுவின் நடப்பு செலவினமானது வருமான மற்றும் செலவின கணக்கில்

1. நிர்வாக மற்றும் தாபிப்பு செலவினம்
2. தனியாள் வேதனாதிகள்

ஆகியவற்றின் கீழ் காட்டப்படும்

1979 ஆம் அண்டின் 53 ஆம் இலக்க ஊக்குவிப்பு சட்டத்திற்கு அமைவுற ஆணைக்குழுவின் நோக்குகளினை பூரணப்படுத்துவம் செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆணைக்குழுவினால் செலவிடப்பட்ட செலவினங்கள் மூலதனசெலவினங்களாக பிரதிநிதித்துவம் செய்யப்படும். அரச மானியங்களுடன் தொடர்புடைய நடப்பு செலவினங்கள் இலாப நட்ட கணக்கிலும் மற்றும் அரச மானியங்களுடன் தொடர்புடைய மூலதன செலவினங்கள் மூலதனமாகவும் கணக்கீடு செய்யப்பட்டும் அதே வேளையில் சம்பந்தப்பட்ட மூலதன செலவினமானது காலத்துடன் இலாபம் அல்லது நட்டத்தில் கடன் தீர்வு செய்யப்படும் .

### 8. காசோட்டக் கூற்று

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் காசோட்டக் கூற்று அரச பொதுத்துறை கணக்கியற் சட்டம் 2 இற்கு அமைவுற நேரடியற்ற முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது

### 9. நிதி சேகரிப்பு / அனுசரனையாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடைகள்

ஆணைக்குழுவானது ஒதுக்கீட்டு கணக்குகளின் ஊடாக அனுசரணையாளர்கள் மற்றும் தரப்பினரிடமிருந்து நிதியத்தினை ஆணைக்குழு சேகரிக்கின்றது.

10. **தொடர்புடைய தரப்பினர் பற்றிய வெளிப்படுத்துகைகள்**

ஆணைக்குழுவானது இலங்கையின் அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமம் - SLPSAS 14 - 'தொடர்புடைய தரப்பு வெளிப்படுத்தல்கள்' இல் தொடர்புடைய தரப்புகளாக வரையறுக்கப்பட்ட தரப்புகளுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டுள்ளது .

**பிரதான முகாமைத்துவ ஆளணியினர்களுடன் கொடுக்கல் வாங்கல்கள் (KMP)**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் (SLPSAS 14) படி, பிரதான முகாமைத்துவ அதிகாரிகள்' என்பவர்கள் நிறுவனத்தின் அனைத்து பணிப்பாளர்கள் அல்லது ஆளும் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் நிறுவனத்தின் நடவடிக்கைகளை திட்டமிடுதல், நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் மற்றும் பொறுப்பைக் கொண்ட பிற நபர்கள் ஆவர். அதன்படி, ஆணையாளர், உதவி ஆணையாளர்கள் மற்றும் ஆணையத்தின் பணிப்பாளர் (பிரதான நிறைவேற்று அதிகாரி) ஆகியோர் ஆணையத்தின் பிரதான முகாமைத்துவ அதிகாரிகள்' (KMP) என வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உள்ளவாறாக நோக்கின் திரு.எஸ்.கே.சிறில் சுதுவெல்ல (தலைவர்), திருமதி கல்பனி ராஜபக்ஷ (உதவி ஆணையாளர்), எந்திரி டி.டி.ஆனந்த நாமல் (உதவி ஆணையாளர்) ஆகியோர் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக தனது சேவையினை வழங்கியதுடன் திரு.என்.என்.டபிள்யு.டொலவத்த அவர்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் /பிரதான நிறைவேற்று அதிகாரியாக கடமை புரிகின்றனர்.

**பிரதான முகாமைத்துவ ஆளணியினர்களுக்கு வழங்கப்படும் ஊதியம்**

| டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான | 2023<br>இலங்கை<br>ரூபாய் | 2022<br>இலங்கை<br>ரூபாய் |
|---|---|---|
| சபை உறுப்பினருக்கான ஊதியம் | **1,503,743** | **1,335,893** |
| | | |
| பணிப்பாளருக்கான ஊதியம் | **2,026,514** | **1,940,923** |
| | | |
| **மொத்தம்** | **3,530,257** | **3,276,816** |

**பிரதான முகாமைத்துவ ஆளணியினர்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கல்கள் (KMPs)**

| டிசம்பர் 31 இல் உள்ளவாறாக | 2023<br>இலங்கை<br>ரூபாய் | 2022<br>இலங்கை<br>ரூபாய் |
|---|---|---|
| நிதி நிலைமை பற்றிய கூற்றில் உள்ள விடயங்கள் | | |
| சொத்துக்கள் – கடன் | **234,888** | **196,217** |
| இலாபம் அல்லது நட்டம் பற்றிய கூற்றில் உள்ள விடயங்கள் | | |
| வட்டி வருமானம் | **8,759** | **9,300** |

இதனை விட ஆணைக்குழுவின் பராமரிப்பின் கீழ் வாகனங்களினையும் பணிப்பாளருக்கு (பி.நி.ஆ.) ஆணைக்குழு வழங்கியுள்ளது.

| | | 2023<br>இலங்கை ரூபாய் | 2022<br>இலங்கை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | **காசும் வங்கி மீதியும்** | | |
| | காசுப்புத்தகம்- 033100101791066 | 24,429,746 | 19,799,754 |
| | காசுப்புத்தகம்- 033100121791065 | | |
| | அடை காப்பகம் | 13,762,138 | 13,762,138 |
| | IFMSL | 30,137,415 | 26,687,415 |
| | புத்தாக்குனர் நிதியம் | 7,630,667 | 5,060,562 |
| | காசுப்புத்தகம்- 204402131791066 வெளிநாட்டு நிதியம் ) | 2,256,593 | 2,353,101 |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **78,216,559** | 67,662,970 |
| 2 | **கடன் பட்டோர்** | | |
| | ரிஷான் டுலாஞ்சனா | 620,511 | 316,631 |
| | C. தசநாயக | 653,800 | 691,800 |
| | S. ரணசிங்க | 248,732 | 245,698 |
| | சாகரிகா உபமாலி | 114,900 | 128,256 |
| | உதயசிறி | 366,666 | 366,666 |
| | டிஷந்த பிரேமநாத் | 422,787 | 224,847 |
| | நிலந்த குணசிங்க | 487,930 | 267,930 |
| | சமன் ஹெட்டி ஆராய்ச்சி | 599,000 | 497,352 |
| | துலித சிகாலிந்து | 1,740,600 | 580,200 |
| | றோஹான் பேசில் நிஷங்க | - | 100,000 |
| | ஜெயவர்த்தன | 950,000 | 2,800,000 |
| | ஏனையவை -- செயற்பாட்டில் அற்றவை | 9,117,683 | 9,117,683 |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **15,322,609** | 15,337,062 |
| 3 | **முற் கொடுப்பனவுகள்** | | |
| # | ஒப்பந்த சேவைகள் முற் கொடுப்பனவுகள் | 580,614 | 520,856 |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **580,614** | 520,856 |
| 4 | **ஐயக்கடன் ஒதுக்கீடு 100%** | | |
| | ஜனவரி 31 இல் உள்ளவாறான மிகுதி | 9,602,964 | 9,602,964 |
| | வருடத்திற்கான ஒதுக்கீடு | - | - |
| | அறவிட முடியா கடன் பட்டோர் | - | - |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **9,602,964** | **9,602,964** |

## 5 மீளளிக்கத்தக்க வைப்புகள்

| | | |
|---|---|---|
| Gavinro Property Developers | - | 2,400,000 |
| Mobitel (Pvt)Ltd | 2,000 | 2,000 |
| Express Water System (Pvt) Ltd | 5,000 | 5,000 |
| **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **7,000** | 2,407,000 |

## 6 இருப்பு மதிப்பீடு (இலங்கை அரச பொதுத்துறை கணக்கியற் கட்டளை சட்டம் 9 - SLPSAS)

காகிதாயிகள் இறுதி இருப்பானது SLPSAS 9 இற்கு அமைவுற முதல் வந்தது முதல் போதல் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது

| | | |
|---|---|---|
| **காகிதாயிகள்** | | |
| ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | 595,115 | 386,860 |
| வருடகாலத்தில் கொள்வனவு | 121,095 | 549,962 |
| வருடகாலத்தில் செலவினம் | (232,209) | (341,707) |
| **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **484,001** | 595,115 |

| | | |
|---|---|---|
| **T சேர்ட்டுக்கள்** | | |
| ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | 320,280 | 414,480 |
| வருடத்தில் கொள்வனவு | - | - |
| வருட காலப்பகுதியில் செலவினம் | (320,280) | (94,200) |
| **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | - | 320,280 |

## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)
## 7. பெறுமானத்தேய்வு (நிலையான சொத்துக்கள்)

| | அலுவலக உபகரணங்கள் | தளபாட உபகரணங்கள் | பெயர் பலகைகள் | வாகனங்கள் | ஊடக உபகரணங்கள் | தொலைக்காட்சி மற்றும் கானொளி நாடாக்கள் | அலுவலக பொருத்துக்கள் | **இயந்திரமும் கருவிகளும்) (அடைகாப்பக (நிலையங்கள்** | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **இல. ரூபா.** | **இல. ரூபா.** | **இல. ரூபா.** | **இல. ரூபா.** | **இல. ரூபா.** | **இல. ரூபா.** | **இல. ரூபா.** | **இல. ரூபா.** | **இல. ரூபா.** |
| **கிரய விலை /சாதார பெறுமதி** | | | | | | | | | |
| 2021 ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | 10,793,257 | 2,569,590 | 211,305 | 21,500,000 | 2,290,994 | 946,400 | 226,175 | 37,477,948 | **76,015,672** |
| வருடத்தில் சேர்க்கப்பட்டவை | 1,336,320 | 42,098 | - | - | 5,850 | - | - | - | **1,384,268** |
| வருடத்தில் விற்பனை செய்யப்பட்டவை | (27,000) | (944) | (110,805) | - | - | - | (18,880) | - | **(157,629)** |
| **2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **12,102,577** | **2,610,744** | **100,500** | **21,500,000** | **2,296,844** | **946,400** | **207,295** | **37,477,948** | 77,242,310 |
| வருடத்தில் சேர்க்கப்பட்டவை | - | - | - | - | - | - | - | - | **-** |
| வருடத்தில் விற்பனை செய்யப்பட்டவை | (4,553,539) | (120,282) | - | - | (1,127,435) | - | - | - | **(5,801,256)** |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **7,549,038** | **2,490,462** | **100,500** | **21,500,000** | **1,169,409** | **946,400** | **207,295** | **37,477,948** | **71,441,054** |
| **திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு** | | | | | | | | | |
| 2021 ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி (மீள் குறிப்பீடு) | 7,401,787 | 1,409,846 | 157,813 | 0 | 1,521,377 | 646,818 | 85,669 | 13,318,204 | **24,541,514** |
| வருடத்திற்கான விதிப்பனவுகள் | 873,490 | 149,314 | 6,700 | 4,300,000 | 116,417 | 104,819 | 16,930 | 7,495,590 | **13,063,260** |
| விற்பனைகள் | (22,133) | (588) | (110,805) | - | - | - | (9,668) | - | **(143,194)** |
| **2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | 8,253,145 | 1,558,572 | 53,708 | 4,300,000 | 1,637,793 | 751,637 | 92,931 | 20,813,794 | **37,461,580** |
| முன்னைய வருட சீராக்கல் | 14,205 | - | - | - | - | - | - | - | **14,205** |
| **2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி (மீள் குறிப்பீடு)** | **8,267,350** | **1,558,572** | **53,708** | **4,300,000** | **1,637,793** | **751,637** | **92,931** | **20,813,794** | 37,475,785 |
| வருடத்திற்கான விதிப்பனவுகள் | 865,276 | 149,413 | 6,700 | 4,300,000 | 113,777 | 104,819 | 16,930 | 7,495,590 | **13,052,504** |
| விற்பனைகள் | (4,247,241) | (109,078) | - | - | (1,127,435) | - | - | - | **(5,483,754)** |
| **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **4,885,385** | **1,598,907** | **60,408** | **8,600,000** | **624,135** | **856,456** | **109,861** | **28,309,383** | **45,044,536** |
| **தேறிய புத்தக பெறுமதி** | | | | | | | | - | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2022டிசம்பர் 31 இல் உள்ளவாறாக (மீள் குறிப்பீடு) | 3,835,227 | 1,052,172 | 46,792 | 17,200,000 | 659,051 | 194,763 | 114,364 | 16,664,154 | **39,766,525** |
| 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறாக | **2,663,653** | **891,555** | **40,092** | **12,900,000** | **545,274** | **89,944** | **97,434** | **9,168,565** | **26,396,518** |

* ஜனவரி 01, 2022 முதல் அமுலுக்கு வரும் வகையில் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மாற்றப்பட்டுள்ளது.
* டிசம்பர் 31, 2021 முதல் வாகன வகை சொத்துக்களுக்கு மறுமதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படுகிறது. அந்த வகை சொத்துக்கள் அவற்றின் நியாயமான மதிப்பில் மதிப்பீட்டு செய்யப்படும் . மறுமதிப்பீட்டு மிகையானது ஒப்புரவில் அங்கீகரிக்கப்படுகிறது. ஏனைய சொத்துக்களாவன உயர் திரவத்தன்மையானவை இல்லை என்பதனால் அவை வரலாற்றுச் கிறைய அடிப்படையில் மதிப்பீட்டு செய்யப்படும்
* வாகனம் எண்.253-2750, ஆனது திறன் விருத்தி , தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சினால் 17 செப்டம்பர், 2020 தொடக்கம் ஆணைக்குழுவின் பயன்பாட்டுக்காக மாற்றப்படும்

| | | | |
|---|---|---|---|
| **8** | **ஏனைய கொடுப்பனவுகள்** | | |
| # | கடன் கொடுத்தோர் | 1,171,664 | 2,160,664 |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **1,171,664** | 2,160,664 |
| **9** | **நிலுவை செலவினங்கள்** | | |
| # | கொடுக்கப்படவேண்டிய துப்புரவாக்கற் செலவினம் | 64,806 | 12,558 |
| # | கொடுக்கப்படவேண்டிய தண்ணீர் கட்டணம் | 15,234 | 10,562 |
| # | கொடுக்கப்படவேண்டிய மின்சார கட்டணம் | 166,302 | 210,295 |
| # | கொடுக்கப்படவேண்டிய தொடர்பாடல் கட்டணம் | 66,300 | 41,592 |
| # | கொடுக்கப்படவேண்டிய எரிபொருள் ,மசகு எண்ணெய் கட்டணம் | 167,283 | 24,400 |
| # | கொடுக்கப்படவேண்டிய கணக்காய்வு கட்டணம் | 1,262,700 | 1,089,800 |
| # | கொடுக்கப்படவேண்டிய மேலதிக நேரம் கட்டணம் | 170,825 | 9,841 |
| # | கொடுக்கப்படவேண்டிய ஏனைய ஒப்பந்த கட்டணம் | - | 171,077 |
| # | கொடுக்கப்படவேண்டிய சஹுசக் நிமவும் கட்டணம் | - | 1,460,355 |
| # | கொடுக்கப்படவேண்டிய பணிக்கொடை கட்டணம் | - | 131,285 |
| # | கொடுக்கப்படவேண்டிய புத்தாக்குனர் கழக கட்டணம் | - | 40,000 |
| # | கொடுக்கப்படவேண்டிய ஏனைய படிகள் கட்டணம் | 16,500 | - |
| # | கொடுக்கப்படவேண்டிய பிரயாண கட்டணம் | 25,030 | 350 |
| # | கொடுக்கப்படவேண்டிய வாடகை கட்டணம் | 2,334,000 | 2,334,000 |
| # | கொடுக்கப்படவேண்டிய உள்நாட்டு இறைவரி - PAYE Payable கட்டணம் | 7,114 | - |
| # | கொடுக்கப்படவேண்டிய முத்திரை கட்டணம் | 1,675 | 1,725 |
| # | கொடுக்கப்படவேண்டிய ஏனைய நிர்வாக கட்டணம் Payable | - | 1,559,191 |
| # | கொடுக்கப்படவேண்டிய ஏனைய கட்டணம் | 845,075 | 49,500 |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **5,142,844** | 7,146,531 |
| **10** | **மகாவலி கருத்திட்ட ஒதுக்கீடு** | | |
| | ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | 6,558,705 | 6,534,026 |
| | மகாவலி அதிகாரசபையிடமிருந்து கிடைக்கப்பட்ட நிதியம் | | 588,891 |
| | **கருத்திட்ட செயற்பாடுகளுக்கான செலவினம்** | | |
| | யானை வேலி கருத்திட்டத்தில் இருந்து நிர்வாக செலவினம் | (3,280) | (564,212) |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | **6,555,425** | 6,558,705 |
| **11** | **பணிக்கொடை** | | |
| | 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டம்- பணிக்கொடை கொடுப்பனவு. | | |
| | ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | 4,423,824 | 4,268,344 |
| | வருடத்திற்கான ஒதுக்கீடு | 1,578,608 | 554,030 |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருடத்திற்கான பணிக்கொடை கொடுப்பனவு | | (596,095) | (398,550) |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | | **5,406,337** | **4,423,824** |
| 12 | **புத்தாக்குனர் விரைவுபடுத்துகை நிதிய பொறிமுறை - ) இலங்கைIAFM-SL)** | | | |
| | ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | | 36,472,155 | 36,472,155 |
| | கிடைக்கப்பெற்ற நிதியம் | | - | - |
| | புத்தாகுனர் நிதியத்திற்கு மாற்றப்பட்டது | | - | - |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | | **36,472,155** | 36,472,155 |
| 13 | **தேசிய அடைக்காப்பக நிதியத்திற்கான செலவினம்** | | | |
| | ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | | 30,426,293 | 37,921,883 |
| | கிடைக்கப்பெற்ற நிதியம் | | - | - |
| | <u>அடைக்காப்பகங்களினை தாபிப்பதற்கான செலவினம்</u> | | | |
| | ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மீதான கடன் தீர்வு | 5 | (3,648,242) | (3,648,242) |
| | ருகுணு பல்கலைக்கழகத்தின் மீதான கடன் தீர்வு செலவினங்கள் | 5 | (3,847,348) | (3,847,348) |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | | **22,930,703** | 30,426,293 |
| 14 | மூலதன மானியம் | | | |
| | ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | | 5,304,070 | 9,905,989 |
| | கிடைக்கப்பெற்ற நிதியம் | | 10,050,000 | 10,070,000 |
| | கருத்திட்ட செயற்பாடுகள் மீதான செலவினம் | 17 | (5,921,929) | (9,018,748) |
| | பதவியணி செயற்றிறன் நிர்மாணம் | | (7,500) | (85,500) |
| | மூலதன மானிய கடன் தீர்வு - நிலையான சொத்துக்கள் | 5 | (5,556,914) | (5,567,670) |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | | **3,867,728** | 5,304,070 |
| 15 | **இலங்கை புத்தாக்குனர் நிதியம்** | | | |
| | ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி | | 12,837,184 | 12,837,184 |
| | கொடுப்பனவு | | - | - |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி** | | **12,837,184** | 12,837,184 |
| 16 | **அரச பங்களிப்பு** | | | |
| | அரச பங்களிப்பின் சுருக்க விபரம் வருமாறு | | | |
| | இலங்கை கணக்கியற் சட்டம் 24 இற்கு அமைவுற | | | |
| | நடப்பு மானியம் | | 43,023,000 | 49,400,000 |
| | மூலதன மானியம் | | 10,050,000 | 10,070,000 |
| | **வருடத்திற்கானது** | | **53,073,000** | 59,470,000 |

## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

| | | | 2023 LKR | 2022 LKR |
|---|---|---|---|---|
| 17 | ஏனைய வருமானம் | | | |
| | | அனர்த்த கடன் வட்டி | 140,036 | 160,948 |
| | | வெளிநாட்டு நாணய வட்டி | 45,322 | 42,359 |
| | | நானாவித வருமானம் | 37,022 | 230,534 |
| | | வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல் இலாபம் | - | 1,026,742 |
| | | SN பதிவுக்கட்டணம் | 390,070 | 173,042 |
| | | உரிமை ஊதியம் | 9,106 | 4,657 |
| | | அப்புற ப்படுத்துகை இலாபம் | 18,102 | |
| | | | **639,658** | **1,638,282** |
| 18 | தனி ஆள் வேதனாதிகள் | | | |
| | # | சம்பளங்களும் கூலிகளும் | 10,429,388 | 11,375,474 |
| | # | வாழ்க்கைப்படி செலவினம் | 1,948,813 | 2,188,561 |
| | # | தொழில் சார்பியல் படிகள் | 193,144 | 169,288 |
| | # | ஏனைய படிகள்-staff | 1,249,239 | 1,402,924 |
| | # | ஏனைய படிகள் | 338,000 | 393,000 |
| | # | எரிபொருள் படி | 598,420 | 550,135 |
| | # | தொடர்பாடல் படி | 114,696 | 123,000 |
| | # | ஊழியர் சேமலாப நிதி நிதிய செலவினம் | 1,856,730 | 2,034,605 |
| | # | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 371,346 | 408,699 |
| | # | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை கொடுப்பனவு | 384,432 | 629,780 |
| | # | உறுப்பினர்களுக்கான வேதனம் | 1,503,743 | 1,331,893 |
| | # | பதவியணி செயற்றிறன் நிர்மாணம் | 7,500 | 85,500 |
| | | | **18,995,451** | **20,692,859** |
| 19 | நிர்வாகம் மற்றும் தாபிப்பு செலவினம் | | | |
| | # | பிரயாண செலவினம் - உள் ளூர் | 61,640 | 143,619 |
| | # | பிரயாண செலவினம் - வெளிநாடு | 117,734 | - |
| | # | காகிதாயிகள் | 260,378 | 353,065 |
| | # | எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் செலவினம் | 1,093,623 | 608,233 |
| | # | திருத்தற் மற்றும் பேணல் செலவினங்கள் கருவிகள் - | 24,488 | 9,189 |
| | # | திருத்தற் மற்றும் பேணல் செலவினங்கள் வாகனங்கள் - | 1,473,979 | 532,596 |

| | | | |
|---|---|---|---|
| # | கட்டட பராமரிப்பு செலவினம் | 1,242,864 | - |
| # | தபாற் கட்டணம் | 56,250 | 56,825 |
| # | தொடர்பாடல் கட்டணம் | 632,374 | 564,419 |
| # | பயன்பாட்டு செலவினங்கள் | 6,985 | 20,144 |
| # | ஒப்பந்த செலவினம் | 775,240 | 1,612,152 |
| # | மின்சார கட்டணங்கள் | 1,202,773 | 1,250,039 |
| # | துப்புரவாக்கற் கட்டணங்கள் | 204,110 | 511,558 |
| # | நீர்க் கட்டணங்கள் | 111,592 | 80,969 |
| # | வாடகை செலவினங்கள் | 14,004,000 | 14,834,000 |
| # | களியாட்ட செலவினங்கள் | 147,489 | 244,592 |
| # | ஊழியர் நலம் | 3,000 | - |
| # | பத்திரிகைகள் மற்றும் பருவ இதழ்கள் செலவினம் | 790 | - |
| # | கணக்காய்வு கட்டணங்கள் | 410,500 | 319,300 |
| # | குத்தகை, வாடகை செயற்படச் செய்தல் | - | 1,591,600 |
| # | ஏனைய நிர்வாக செலவினங்கள் | 676,746 | 2,138,709 |
| | | **22,506,555** | **24,871,009** |
| **20** | **புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினங்கள்** | | |
| # | புத்தாக்குனர் புத்தாக்கங்கள் மேம்படுத்துகை | 2,578,626 | 4,736,746 |
| # | சனாதிபதி விருதுகள் | 550,830 | 74,000 |
| # | சஹசக் நிமவும்' தேசிய கண்காட்சி | 2,770,948 | 1,952,558 |
| # | விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்தல் | - | 28,175 |
| # | புத்தாக்குனர் கழகங்களினை தாபித்தல் | 15,510 | 1,520,000 |
| # | சர்வதேச மாநாடு "FITI" | - | 359,065 |
| # | இலக்கு செய்யப்பட்ட குழு போட்டி | - | 131,250 |
| # | புத்தாக்கங்களினை வர்தகமயப்படுத்தல் | 6,015 | 166,514 |
| # | IAFM - SL நிகழ்ச்சித்திட்டம் | - | 50,440 |
| | | **5,921,929** | **9,018,747** |
| **21** | **ஏனைய செலவினங்கள்** | | |
| # | சொத்து விற்பனை நட்டம் | 314,105 | 13,436 |
| # | வெளிநாட்டு நாணய பரிவர்த்தனை இழப்பு | 286,025 | - |
| | | **600,130** | **13,436** |

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இலக்கம் .: IMT/F/SLIC/1/23/25 2024 மே 28

**ஆணையாளர்**

**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**

**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதியியற் கூற்றுக்கள்

### 1.1 முனைபழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு என்பனவற்றினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களாவன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) வது பிரிவின்படி எனது அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைபழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் தரப்பட்டுள்ள விடயங்களில் உள்ள தாக்கங்களினை தவிர்த்து, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைபழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கியல் கட்டளை சட்டம் இலக்கம் 07 இன் அத்தியாயம் 92(ஆ) இன் பிரகாரம், சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த சொத்துக்களின் முன் கொண்டு சென்ற மிகுதியாக இருப்பதும், ரூபாய் 1,469,302 மதிப்புடையதுமான இந்த சொத்துக்களாவன, இன்னும் பயன்பாட்டில் இருப்பதுடன் அவை நிதிநிலை அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ ) வாழ்க்கை செலவுக்கொடுப்பனவு ரூபாய் 7,800 என்பதற்கு பதிலாக ரூபாய் 17,800 என்ற தவறான வாழ்க்கை செலவுக்கொடுப்பனவினை பயன்படுத்தியதன் காரணமாக பணிக்கொடை ஒதுக்கீடுகள் நிதிநிலை அறிக்கைகளில் ரூபாய் 905,002 ஆல் மிகைபடுத்தப்பட்டுள்ளன

நான் இலங்கை கணக்கியல் தரநிலைகளுக்கு (SLAUSs) இணங்க கணக்காய்வினை முன்னெடுத்தேன். அந்தத் தரங்களின் கீழ் எனது பொறுப்புகள் எனது அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்பதில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்ற கணக்காய்வு சான்றுகள் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்க போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும் என்று நான் நம்புகிறேன்

### 1.3 ஆணைக்குழுவின் 2023 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

ஆணைக்குழுவின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் ஏனைய தகவல்களாவன உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாததாக காட்டப்பட்ட இந்த ஏனைய தகவல்களாவன , இக்கணக்காய்வு அறிக்கைக்குறிய திகதிக்கு பின்பே எனக்கு வெளிப்படுத்தப்பட்டது இதற்கு முகாமைத்துவமே பொறுப்பாகும்.

நிதியியல் கூற்றுக்கள் பற்றிய எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் பற்றி வெளிப்படுத்தப்படவில்லை என்பதுடன் இத் தகவல்கள் தொடர்பில் எதுவித் உத்தரவாதமோ அல்லது அபிப்பிராயமோ என்னால் தர முடியாது. நிதியியல் கூற்றுக்களினை பொறுத்த வரையில் எனது பொறுப்பானது , ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படும் போது அவற்றினை வாசித்தலாகும். அவ்வாறு வாசிக்கும் போது எனது அறிவுக்கு எட்டிய வரையில் கணக்காய்வின் போது அல்லது வேறு ஏதேனும் வகையில் நிதிக்கூற்றுக்களில்காணப்படக்கூடிய இணங்காமையினை கருத்தில் கொள்தலாகும் .

ஆணைக்குழுவின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கையை நான் வாசித்த போது, ஆணைக்குழு அளவீட்டுத் தவறுகளைக் காட்டியிருப்பதாக நான் முடிவு செய்தால். அந்த விடயங்களின் துல்லியத்தன்மையினை அறிந்துக்கொள்வதற்கு அவ்விடயங்களினை நான் முகாமைத்துவத்திற்க்கு தெரியப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்ய முடியாவிட்டால், அரசியலமைப்பின் 154 (6) வது பிரிவின்படி எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் அவற்றைச் உள்ளடக்கல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது ஆணைக்குழுவினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும்; ஆணைக்குழுவினது தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும் .நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல .மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

கணக்காய்வின் ஒரு பகுதி என்ற வகையில் இலங்கை கணக்காய்வு சட்டங்களுக்கு அமைவுற துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும்.
  பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ,உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள்

அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவினது தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டில் உள்ள பலவீனங்கள் மற்றும் பிற விடயங்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் ஆளுநர் தரப்பினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன

2.1.1 எனது அறிக்கையில் முனைபழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரிவு 12 (அ) வினது தேவைப்பாடுகளுக்கு அமைய கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டன என்பதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் ஆணைக்குழுவில் பேணப்பட்டுள்ளன

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஐ)(ஈ)(III)ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம்; சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றது

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஐ)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பந்தி (ஆ) இல் தரப்பட்டதனைத் தவிர சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன .ஆனால் வேறு கீழே குறிப்பிடப்படுகின்ற எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ)பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் ஆளுனர் சபை உறுப்பினர் தேசிய ஆராய்ச்சி மன்றத்துடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமைக்கு புறம்பாக தொடர்பு உள்ளதாகவும்

2.2.2. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(உ)பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தினால் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம் அல்லது நிர்வாக சபையினால் விநியோகிக்கப்பட்ட பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாது நிறுவகம் செயற்பட்டுள்ளதாகவும்

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ))பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம், நிறுவனமானது அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளது

| சட்டங்கள்,விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் தொடர்புடைய குறிப்புக்கள் | *விவரணம்* |
|---|---|
| 1979ஆம் ஆண்டின் . 53ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் பந்தி 119(1)உ | **காப்புரிமை பெற்ற புத்தாக்கங் களினை ஊக்குவிக்கும் முகமாக "புத்தாக்கங்களுக்கு சனாதிபதி விருதுகள் வழங்கும் " வைபவமானது இடம்பெறுகின்ற போதிலும் இந்த வைபவமானது** 7 **வருடங்களாக அதாவது** 2017 **இலிருந்து** 2023 **வரையில் இடம்பெறவில்லை** |

.2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் (12எ)பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஆணைக்குழுவானது வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பெறப்பட்டு பயன்படுத்தியிருக்கவில்லை.

## 2.2 ஏனைய விடயங்கள்

(அ) 2018 ஆம் ஆண்டில், ஆணைக்குழுவானது ஒரு சாத்தியக்கூறு ஆய்வு அல்லது சரியான திட்டமிடல் எதுவும் இல்லாது, ஒரு தரவுத்தளத்தை உருவாக்கியது. அது தொடர்பில் ரூபாய் 4,600,000, செலவழித்திருந்த போதிலும் அது நிறுவப்பட்டதிலிருந்து 39 விண்ணப்பங்கள் மட்டுமே பெறப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டு நிலவரப்படி, தரவுத்தளம் செயலற்ற நிலையில் உள்ளது.

(ஆ) மொத்த கடன் பாக்கியானது ரூபாய் , 14,372,609 ஆகும் இதில் ரூபாய் .12,632,009 ஆனது 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது. மற்றும் ரூபாய் 1,740, 600 3 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது. துரதிர்ஷ்டவசமாக, கடன் மீட்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் என்பன பலவீனமானதாக இருந்ததினாலும் மற்றும் உத்தரவாததாரர்கள் பற்றிய போதுமான தகவல்கள் இல்லாததாலும் இந்தத் தொகைகளை மீட்டெடுக்க முடியவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிலிருந்து கண்டுபிடிப்பாளர்கள் நிதியத்திலிருந்த மீதித்தொகையான ரூபாய் 12,837,184 மற்றும் 2020 ஆம் ஆண்டு முதல், அடைகாக்கும் மையங்களை நிறுவுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்த மீதித்தொகையான ரூபாய் 13,762,138 ஆகியன நடப்புக் கணக்கில் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது.

(ஈ) மஹாவலி திட்டத்துடன் தொடர்புடைய வகையில் 2021 முதல் முன்னோக்கி கொண்டு செல்லப்பட்ட கடன் பாக்கியான ரூபாய் 834,224 மற்றும் பாடசாலை கண்டுபிடிப்பு வட்டங்களுக்காக வழங்கப்பட்ட தொகையில் மிகுதித்தொகையான ரூபாய் 330,000 ஆகியன மதிப்பாய்வு ஆண்டு நிறைவடைந்த பின்பும் அறுதியீடு செய்யப்படவில்லை

(உ) 2021 ஆம் ஆண்டிலிருந்து ஒப்புக்கொள்ளப்பட்ட சேவைகளுக்காக செலுத்தப்பட்டதும் முற்கொண்டு செல்லப்பட்டதும் 5 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ளதுமான ரூபாய் 341,088 தொகையினை நடப்பு ஆண்டில் கூட செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை .

(ஊ) 2023 ஆம் ஆண்டின் செயற்பாட்டு திட்டத்தில் தரவுத்தள முகாமைத்துவமும் இணையத்தள அபிவிருத்தியும் மற்றும் நிலையான சொத்துக்களினை கொள்வனவு செய்தல் ஆகிய இரண்டு செயற்பாடுகளுக்கா மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபாய் 9,000,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

(எ) கல்வி வர்த்தக கண்காட்சியின் செலவுக்காக தொம்பே பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 500,000 ஆனது பிரதேச சபையின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கில் சேராத கலாசார மற்றும் சமயக்குழு என்ற கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது .

**டபிள்யு.பி.சி. விக்ரமரத்ன**
**கணக்காய்வாளர் நாயகம்**

**2023 ஆம் ஆண்டில் கணக்காய்வு வினவல்களினால் முன்வைக்கப்பட்ட விடயங்களினை சீராக்கம் செய்வதற்கு நிர்வாகத்தினாலும் மற்றும் பணிப்பாளர் குழுவினாலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

**1.3 நிதியியற் கூற்றுக்கள்**

**1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளை சட்டங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தினால் முன்வைக்கப்பட்ட விளக்கங்கள் |
|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளை சட்டம் இல.07ன் பந்தி 92 (b) க்கு இணங்க சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருந்தாலும், முன் கொண்டு செல்லப்படுகின்ற ரூபாய் 1,469,302 மதிப்புடைய சொத்துக்கள் பயன்படுத்தப்படுகிறது என்பது நிதிநிலை அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படவில்லை | 2022 ஜனவரி 1 அன்று, சொத்துகளின் பயனுள்ள வாழ்நாளைப் புதுப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நீங்கள் குறிப்பிட்ட பிரிவில் உள்ள சொத்துகளின் பயனுள்ள வாழ்நாள் அதிகரித்தால், அது வழக்கத்திற்கு மாறான அதிகரிப்பை ஏற்படுத்தும். நீங்கள் அறிவுறுத்தியபடி சொத்துகளின் பயனுள்ள வாழ்நாள் அதிகரிக்கப்பின் , சொத்துக்களின் தேய்மானம் அதிகமாக மதிப்பிடப்படும். |

**1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தினால் முன்வைக்கப்பட்ட விளக்கங்கள் |
|---|---|
| ரூபாய் 7,800 வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவானது , ரூ. 17,800, எனத் தனியாக கணிப்பீடு செய்யப்பட்டமையினால் நிதிநிலை அறிக்கைகளில் பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபாய் 905,002 இனால் மிகைபடுத்தப்பட்டு காட்டப்பட்டுள்ளது. | அவதானிப்புடன் நான் உடன்படுகிறேன். 2024 ஆம் ஆண்டில் இதை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 கணக்கியல் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள்**

**1.4.1 பெறப்படவேண்டிய தொகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தினால் முன்வைக்கப்பட்ட விளக்கங்கள் |
|---|---|
| (அ) மொத்த கடன் பாக்கியான ரூபாய் 14,372,609, இல் 5 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட கடன்பட்டோர் தொகையான ரூபாய் 12,632,009, மற்றும் 3 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட கடன்பட்டோர் தொகையான ரூபாய் 121,740,600 என்பன அடங்கும் .<br>விதிமுறைகள் இல்லாததாலும், போதுமான உத்தரவாததாரர் விவரங்கள் போதுமான விதத்தில் கிடைக்காததாலும் இந்தத் தொகையை திரும்பப் பெற முடியவில்லை | சட்ட அலுவலரின் அறிவுறுத்தல்கள் இல்லாமல் கடன் நிலுவைகளை மீட்பதற்கான முயற்சிகளை தொடர முடியாது, மேலும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சட்ட அதிகாரி மூலம் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) ஒப்பந்த சேவைகளுக்கான முன்பணத்தின் மிகுதி தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை, இது ரூபாய் 341,088 என்பதுடன் 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது. | அவதானிப்புடன் நான் உடன்படுகிறேன். எதிர்காலத்தில் இதை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |

**1.5.2 கொடுக்கப்படவேண்டிய தொகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தினால் முன்வைக்கப்பட்ட விளக்கங்கள் |
|---|---|
| மொத்த கடன்கொடுத்தோர் மிகுதியாக காட்டப்படும் மகாவலி கருத் திட்டத்துடன் தொடர்புடைய ரூபாய் 834,224 மற்றும் பாடசாலை கண்டுபிடிப்பாளர் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபாய் 330,000 ஆகியன ஆண்டு இறுதியிலும் அறுதியீடு செய்யப்படவில்லை . | நிலுவைகளைத் தீர்த்தல் தொடர்பில் தேவையான எதிர்காலப் பணிகள் நிமித்தம் இலங்கை மகாவலி அதிகார சபையிடமிருந்து உரிய அனுமதிகளைப் பெறுவதற்காக, 03 தடவைகள், அதாவது மின்னஞ்சல் ஊடாக 02 தடவைகளும் 2023.16.23 திகதியிட்ட கடிதம் மூலமாக ஒரு தடவையும் நினைவூட்டல்கள் அனுப்பிவைக்கப்பட்டன. இதன்படி, கொடுக்கப்படவேண்டிய நிலுவைகளை தீர்ப்பதற்கு ஆணைக்குழு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும், இலங்கை மகாவலி அதிகாரசபையிடமிருந்து மேலதிக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாத காரணத்தினால் நிலுவைகளை தீர்ப்பதற்கு ஆணைக்குழுவால் முடியவில்லை. |

**1.5 சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தினால் முன்வைக்கப்பட்ட விளக்கங்கள் |
|---|---|
| கணக்கெடுப்பு சபையின் ஆக்கம் – இந்த சபையானது களஞ்சிய காப்பாளருடன் மேலதிகமாக இரு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அல்லது இவ்விடயத்துடன் தொடர்புடைய ஏனைய அதிகாரிகள் அல்லது அவர்களுக்கு நேர் கீழ் பணிபுரியும் அதிகாரிகளினை கொண்டிருத்தல் வேண்டும் என இருந்த போதிலும் ஆணைக்குழுவானது, 5 அதிகாரிகளைக் கொண்ட கணக்கெடுப்பு சபையினை நியமித்துள்ளது | அவதானிப்புடன் நான் உடன்படுகிறேன். எதிர்காலத்தில் இதை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |
| உத்தியோகபூர்வ பயணங்களின் போது, தாபன விதிக்கோவையில் குறித்துறைக்கப்பட்டவற்றிக்கு அமைவுற , அதிகாரிகள் விரைவாகவும், குறுகிய பாதையிலும், அரசாங்கத்திற்கு குறைந்த செலவில் பயணிக்கக்கூடிய வழியிலும் செல்ல வேண்டும் என இருந்த போதிலும், ஆணைக்குழு இவ்விடயத்தில் கவனம் செலுத்தவில்லை. நுவரெலியா, கிழக்கு மாகாணம், ஊவா மாகாணம் ஆகிய இடங்களுக்குப் பயணித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கண்காணிப்புகளை நடத்தி மின்சார வேலியை ஒப்படைத்த சந்தர்ப்பங்களில் , வாகனம் 842 கிலோமீட்டர் தூரம் பயணித்ததால் ரூபாய் 22,501.மேலதிக செலவினம் ஏற்பட்டது | அவதானிப்புடன் நான் உடன்படுகிறேன். எதிர்காலத்தில் இதை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |
| காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்புகளுக்கு உரிய கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்க ஜனாதிபதி விருது வழங்கல் வைபவம் நடத்தப்பட வேண்டும்.எனினும், 2017 முதல் 2023 வரை அதாவது 7 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த விருதுகள் வழங்கப்படவில்லை | இது தொடர்பில் ஜனாதிபதியிடமிருந்து ஒரு திகதியினை பெற்றுத் தரும்படி 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், இதுவரை குறிப்பிட்ட திகதிகள் என எதுவும் கிடைக்கவில்லை. இது ஆணையத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்வு என்பதையும் அன்புடன் குறிப்பிடுகிறேன் |

2. நிதி மீளாய்வு

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தினால் முன்வைக்கப்பட்ட விளக்கங்கள் |
|---|---|
| 2018 ஆம் ஆண்டில், விண்ணப்பங்களைக் கையாள ரூபாய் 4,600,000. செலவில் ஒரு தரவுத்தளம் நிறுவப்பட்டது.எனினும் சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் முறையான திட்டமிடல் இல்லாததினால் , இது நிறுவப்பட்ட பிறகு 39 விண்ணப்பங்கள் மட்டுமே பெறப்பட்டன. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் தரவு அமைப்பு செயல்படவில்லை. | நான் இந்த அவதானிப்புடன் உடன்படுகிறேன். தற்போது, இந்த தரவு அமைப்பு ஆணைக் குழுவின் அதிகாரிகளால் இயக்கப்படுகிறது. |

3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தினால் முன்வைக்கப்பட்ட விளக்கங்கள் |
|---|---|
| வர்த்தக மற்றும் கல்வி கண்காட்சிக்காக தொம்பே பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய 500,000 ரூபாவை பிரதேச சபையின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கில் சேராத கலாசார மற்றும் மதக் குழு என்ற கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | ரூபாய்500,000 என்ற இந்த தொகையானது தொம்பே பிரதேச சபையின் கடிதத் தலைப்பின் மூலம் மண்டபக் கட்டணம், மின்சாரம் மற்றும் தளபாடங்கள் என்பனவற்றிற்காக கோரப்பட்டுள்ளதுடன், இந்தக் கணக்கை மக்கள் வங்கியில் உறுதிப்படுத்தியதன் பின்னர் இந்த தொகையானது காசோலை மூலம் செலுத்தப்பட்டது. |

3.3 செயலற்ற அல்லது பயன்படுத்தப்படாத சொத்து, ஆதனம் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தினால் முன்வைக்கப்பட்ட விளக்கங்கள் |
|---|---|
| இலங்கை புத்தாக்குனர்கள் நிதியத்தின் மீதித் தொகை ரூபாய் 12,837,184 மற்றும் அடைகாப்பக மையங்களை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட தொகையின் மீதியானது முறையே 2017 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நடப்புக் கணக்கில் செயலற்ற நிலையில் உள்ளது. | நான் அவதானிப்புடன் உடன்படுகிறேன். கோவிட்-19, பொருளாதார நெருக்கடி மற்றும் கண்டுபிடிப்பாளர்களுக்கு சேவைகளை வழங்குவது போன்ற பல்வேறு காரணங்களால் பல நடைமுறைச் சிக்கல்கள் எழுந்தன. எனவே, கண்டுபிடிப்பாளர்களுக்கு சேவையை வழங்குவதற்காக இந்தத் தொகையை மிகவும் திறம்பட முதலீடு செய்வதற்கான வழிமுறையைத் தயாரிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. |

4. பொறுப்புடைமை மற்றும் சிறந்த ஆளுமை

4.1 வருடாந்த செயல் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தினால் முன்வைக்கப்பட்ட விளக்கங்கள் |
|---|---|
| தரவு அமைப்பு மேலாண்மை மற்றும் தரவுத்தளத்தை மேம்படுத்துதல் மற்றும் நிலையான சொத்துக்களை கையகப்படுத்துதல் ஆகிய 02 செயல்பாடுகளுக்கான மதிப்பிடப்பட்ட தொகை ரூ. 9,000,000, எவ்வாறாயினும், மீளாய்வாண்டில், இந்த நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. | .அவதானிப்புடன் உடன்படுகிறேன் 2023 ஆம் ஆண்டிற்கான காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளில் எதிர்பார்த்த இலக்குகளை எட்டாததற்கான காரணங்கள் கூறப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட தொகைகள் உரிய காலத்தில் பெறப்படவில்லை. |